Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது சித்திரை 20 ஆம் நாள் துல்ஹஜ் (3-5-63) வெள்ளிக்கிழமை இதழ் 83

# அவசரகால நிலை நீக்கப்பட்டது

## நேற்று நள்ளிரவு முதல் அமுல்

### மேதினக்கூட்டத்தில் பிரதமர் ஸ்ரீமதி சிறிமா அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

கடந்த 743 நாட்களாக இலங்கையில் அமுலிலிருந்த அவசரகாலச்சட்டம் நேற்று நள்ளிரவிலிருந்து நீக்கப்பட்டது. 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ந்திகதி பிரகடனம் செய்யப்பட்ட அவசரகாலச்சட்டத்தை அரசாங்கம் நீக்கியுள்ளதாக பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பாக நேற்று நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் அறிவித்தார்.

பிரதமர் மேலும் பேசுகையில், நாட்டின் நலன் கருதியே அவசரகாலச்சட்டம் நீடிக்கப்பட்டதாயும், அரசாங்கம் பலமுறை அதை நீக்க முயற்சித்தும் புரட்சி, சதி போன்ற சம்பவங்கள் நாட்டில் நடைபெற்றது காரணமாக இந்த முயற்சி கைவிடப்பட்டதென்றும் கூறினர்.

"தொழிலாளர் தினமான மே 1-ந் திகதியில் அவசரகாலச்சட்டத்தை நீக்குவதென பலவாரங்களுக்கு முன்பே அரசாங்கம் தீர்மானித்தது" என்றும் பிரதமர் அறிவித்தார்.

# கூட்ட அறிக்கைகள் தமிழில்தயாரிக்கப்படும்

## திருமலை நகரசபை தீர்மானம்

திருக்கோணமலை, வியாழன்

இனிமேல திருமலை நகராண்மைக் கழகத்தின் கூட்ட அறிக்கைகள் யாவும் தமிழில் தயாரிக்கப்பட்டு, பின்னர் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படும என்று கழகத் தலைவர் உறுதியளித்துள்ளார்.

நகராண்மைக் கழகத்தின் மாதாந்தக்கூட்டம் கூடிய போது இனிமேல் தமிழில் கூட்டறிக்கைகள் எழுதப்பட்டு பின்னர் ஆங்கிலத்தில் தயாரிக்கப்படவேண்டும் என திரு. பா. நேமிநாதன் கேட்டுக் கொண்டார். இதுவரை கழக அறிக்கைகள் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு பின்னர் தமிழில் மொழி பெயர்க்கப்படுவதை திரு. நேமிநாதன் சுட்டிக்காட்டினர்.

சங்கங்களாலும் தனிப்பட்டவர்களாலும் அனுப்பப்பட்ட ஆங்கிலக் கடிதங்களை அவர்களுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்ற தீர்மானமும் திருமலையைச் சேர்ந்த ஊர்களின் தமிழ்ப் பெயர்களை சிங்களப் பெயர்களாக்கும் அரசாங்கத்தின் முயற்சியைக் கண்டிக்கும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறின.

# இடதுசாரிகள் பதவிக்கு வந்தால் பிரதமர் யார்?

—சிறிமா கேள்வி

கொழும்பு, வியாழன்

'இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மே தினக் கூட்டத்தில் யார் தலைமை வகிப்பது என்ற சச்சரவு இடதுசாரிக் கட்சிகளின் மூன்று தலைவர்களிடையேயும் தோன்றியுள்ளதாகத் தெரிகிறது. இவர்கள் பதவிக்கு வந்தால் பிரதமர் பதவியைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் எவ்விதம் தீர்வு காணப்போகிறர்கள்?' என பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் பேசுகையில் கேட்டார்.

சுதந்திரக்கட்சியின் தொழிற் சங்க சம்மேளனத்தின் இடைக்காலத் தலைவரான திரு வில்பேர்ட் சில்வா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

மே தினத்தைக் கொண்டாடும் பல கட்சிகளைச் சார்ந்த தொழிலாளர்களும் காலம் சென்ற பிரதமருக்குச்சந்தேகமின்றி கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். சமூகத்தில் தொழிலாளர்களுக்கு அவர்களுக்குரிய இடத்தைக் கொடுத்தவர் அவர் தான்.

காலஞ்சென்ற பிரதமர் மரணம் சம்பந்தப்பட்ட அரசியல் நோக்கங்களை ஆராய ஒரு கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென அவரில் விசுவாசம் வைத்துள்ள தொழிலாளர்கள் கேட்டுள்ளார்கள். இவ்வித கமிஷனென்றை நியமிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

**'எதிர்க்கட்சிகள் ஏற்கவில்லையா?'**

அரசாங்கத்துக்கு இடதுசாரிக்கட்சிகள் ஆதரவு கொடுத்தபோது அரசாங்கத்தின் மத்திய வழிக்கொள்கையை அவை ஏற்றுக் கொள்ளவில்லையா? சுதந்திரக் கட்சியின் பெயரால் இடதுசாரிக்கட்சிகள் தமது சில ஸ்தானங்களைப் பெற்றனர்.

**'அரசியலுக்கு கேடுவிளைவித்தனர்'**

இடதுசாரிக்கட்சிகள் எனது கணவரின் முற்போக்குக்கொள்கைகளுக்கு ஊறுவிளைவித்தனர். அவரது எதிரிகள் இறுதியில் அவரைக் கொலை செய்தனர். சோஷலிஸக் கொள்கைகள் அமுல் நடத்தப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாமென்ற எண்ணத்தில் தான் இவ்விதம் செய்தார்கள். ஆனல் மக்கள் 1960-ம் வருடம் ஜூலை மாதத்தில் மீண்டும் சுதந்திரக் கட்சியை ஆட்சியில் அமர்த்தினர்கள். இதனல் இவர்களது எண்ணம் தோற்கடிக்கப்பட்டது.

**'கஷ்டங்களை ஏற்கத் தயார்'**

உங்களின் நன்மைக்காக கஷ்டங்களையும், துன்பங்களையும் நான் ஏற்கத் தயாராக இருக்கின்றேன். யு. என். பி. யிடமோ வேறு எந்தக் கட்சியிடமோ இருந்து வரும் எதிர்ப்பையும் எதிர்த்து நிற்பதற்கு நான் முன்நிற்கின்றேன். ஆனல் எனக்குத் தேவையானதெல்லாம் உங்கள் (தொழிலாளர்) ஆதரவுதான்.

(8-ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழர் பிரச்னை: மகாராணிக்கு மகஜர்

## சர்வதேசக் கமிஷன் நியமிக்க கோரிக்கை

லண்டன், மே 2

இலங்கையிலுள்ள தமிழர்களின் நிலை பற்றி எலிஸபெத் மகாராணியிடம் நேற்று ஒரு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேசக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டுமென்று அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள எட்டு லட்சம் தமிழரின் சார்பில் மகாராணியிடம் இந்த மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

"இலங்கையிலுள்ள தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே வேண்டப்படாத மக்களாகப் பாவிக்கப் படுகிறர்கள். சாதாரண மனித உரிமைகள் கூட அவர்களுக்கு மறுக்கப்படுகிறது" என்று அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## திருமலை தமிழியக்கம் கிராமங்களுக்கு விஸ்தரிப்பு

திருக்கோணமலை, வியாழன்

தமிழரசுக்கட்சியின் திருக்கோணமலைக் கிளைச் செயற்குழு அண்மையில் கிளைத் தலைவர் திரு. இ. சோமசுந்தரம் தலைமையில் கூடியபொழுது எல்லாம் தமிழியக்கத்தை கிராமப்புறங்களுக்கு விஸ்தரிக்கவேண்டுமென்ற தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இது பற்றி நமது நிருபருக்கு கிளைச் செயலாளர் தெரிவிக்கையில் தற்போது நகரப்பகுதியைச் சேர்ந்த தபாற்கந்தோர்களில் பொதுமக்களில் அதிகமானேர் தமிழிலேயே கருமமாற்றுவதாகவும் இதனல் தொண்டர்கள் கிராமப்பகுதிகளில் எல்லாம் தமிழியக்கத்தை விஸ்தரிப்பர் என்றும் தெரிவித்தார்.

## தனித் தமிழில்

திருக்கோணமலை, வியாழன்

திருமலை நகராண்மைக் கழகக் கூட்ட அறிக்கைகளை உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பும் பொழுது தனித் தமிழிலேயே அனுப்புதல் வேண்டும் என்று 7-ம் வட்டார உறுப்பினர் திரு. இ. சோமசுந்தரம் விடுத்த வேண்டுகோளைத் தலைவர் திரு. சிசிவானந்தம் ஏற்றுக் கொண்டு இனிமேல் ஆணையாளருக்கு அனுப்பப்படும் கூட்டறிக்கைகள், சுற்றறிக்கைகள் யாவும் தனித்தமிழிலேயே அனுப்பப்படுமென்று தெரிவித்தார்.

## சர்ச்சில் அரசியலிலிருந்து விலகுகிறர்

லண்டன், மே 2

உலகின் முதிர்ந்த ராஜதந்திரிகளில் ஒருவரும் 60 வருடம் பார்லிமெண்ட் அங்கத்தவராகவும் பிரிட்டிஷ் பிரதமராக யுத்தகாலத்தில் பணிபுரிந்தவருமான சேர் வின்ஸ்டன் சர்ச்சில் தீவிர அரசியலிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். 89 வயதனா சர்ச்சில் அடுத்தப் பொதுத் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

## 'ஏழைமக்களுக்கு அதிக பணம்'

கலிகோமுவ, வியாழன்

விவசாயிகளுக்காகவும், ஏழைமக்களுக்காகவும் அரசாங்கம் பெரும் தொகையான பணத்தைச் செலவிடுவதாக நிதி மந்திரி இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். புதிதாக அமைக்கப்பட்ட வீதியொன்றை நிதி அமைச்சர் திறந்து வைத்தார்.

## கடற்றொழிற் பகுதி

கடற்றொழிற் கட்டளைச்சட்டம்
(அத்தியாயம் 212)

**சல்லிப்போட் மீன்பிடித் தகராறு திருகோணமலை**

என். 996 மேற்கூறிய தகாற்றை யிட்ட பகிரங்க விசாரணையை திரு. பிறட் ஈ அலெஸ் அவர்கள், 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 29-ம் திகதியின் 13,577 இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியிலறிவிக்கப்பட்டபடி, திருகோணமலை நகர மண்டபத்திலல்லாது, திருகோணமலை அரசாங்க சேவைக் களரியில் 1963-ம் ஆண்டு மேமாதம் 13ம், 14-ம், 15-ம், 16ம், 17-ம், திகதிகளில் தினமும் மு. ப. 10-00 மணிக்கு ஆரம்பித்து நடாத்தப்படுமென்பது பொதுமக்களினதும் மேற்படி மீன்பிடித்தகராற்றுக்குரிய கட்சியினர்களினதும் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கடற்றொழில் அதிபர்

## கடற்றொழிற் பகுதி

கடற்றொழிற் கட்டளைச்சட்டம்
(அத்தியாயம் 212)

**போட் பிறட்றிக் - வாக்வே மீன்பிடித்தகராறு – திருகோணமலை**

என். 997-மேற்கூறிய தகராற்றையிட்டு பகிரங்கவிசாரணையை திரு. பிறட் ஈ அலெஸ் அவர்கள் 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் திகதியின் 13,539-ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியிலறிவிக்கப்பட்டபடி, திருகோணமலை நகர மண்டபத்திலல்லாது, திருகோணமலை அரசாங்கசேவைக் களரியில் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம், 4-ம், 5-ம், 7-ம், 8-ம் திகதிகளில் தினமும் மு. ப. 10-00 மணிக்கு ஆரம்பித்து நடாத்தப்படுமென்பது பொதுமக்களினதும் மேற்படி மீன்பிடித் தகராற்றுக்குரிய கட்சியினர்களினதும் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கடற்றொழில் அதிபர்


திருநெல்வேலி
ஆடியபாதம் வீதியில்
அமைந்திருக்கும்
ஸ்ரீ கணேஷ் களியாட்டுவிழா
அரங்கில் இன்று இரவு
விளான்
வேலுப்பிள்ளை
கோஷ்டியினரின்
அதிஅற்புத
காவடி ஆட்டம்
நடைபெறும்.
மற்றும் அதிபயங்கரமான
சாகஸ சர்க்கஸ் விளையாட்டு
களையும்
காணத்தவறாதீர்கள்!



**St. John's Academy**
**Chundikuli, Jaffna.**

Re-open on Tuesday 14th May 1963.

**Hours of work:** 9 a. m. — 12-45 p.m., 2-30 p. m. — 5-30 p. m.

Evening Classes: From 3-00 p. m. to 7-00 p. m.

Applications for New Admissions must be made before 10th May.

Application forms & Prospectus can be had from the Office on Payment of Re. 1/-

Accommodation available in the Academy Hostel for outstation students.


## வரி விளம்பரம்

**ரெண்டர் விளம்பரம்**

நாவலடி திக்கம் றோட்டு வேலைக்கு ரூபா 10000 – 00க்கு மேல் பதியப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 13-5-63 வரையும் ரெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ரெண்டர் பத்திரம் 11-5-63 காலை 10-00 மணி வரை கிராமசபைக் கந்தோரில் வழங்கப்படும். ரெண்டர் ரூபா 50 - 00 பிணையாகக் கட்டிப பெற்றுக்கொள்ள வேண்டும். ரெண்டர் பத்திரத்திற்கு ரூபா 2 - 00 கட்டுதல் வேண்டும். இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

இ. சச்சிதானந்தம், தலைவர், கலட்டவேலி கிராமசபை.
30-4-63 971

## 'முதலாளி வர்க்கத்தினர் தோற்றுவிட்டனர்'

பேராதனை, வியாழன்

'முதலாளி வர்க்கத்தினர் இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதில் தோற்றுவிட்டனர். முன்னர் எப்பொழுதுமில்லாத நிதி நெருக்கடி நிலைமை இப்பொழுது தோன்றியுள்ளது. இந்த நிலையைச் சமாளிக்க பண நோட்டுகளை அளவுக்கு அதிகமாக அச்சிட்டு வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனுல் வாழ்க்கைச்செலவு அதிகரித்துவிட்டது.'

இவ்வாறு செனட்சபையின் எதிர்க்கட்சித் தலைவர் செனட்டர் டொரிக் டி' சொய்ஸா அகில இலங்கை அரசாங்க மின்சாரத் தொழிலாளர் யூனியனின் கண்டிக் கிளைச் சங்கத்தில் பேசுகையில் கூறினர்.

செனட்டர் சொய்ஸா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

அரசாங்கத்திடம் பணமில்லை எனக்கூறி தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தவில்லை என இப்பொழுதுள்ள அரசாங்கம முடிவுசெய்துள்ளது.

காகிதநோட்டுகளை அளவுக்கதிகமாக வெளியிடுவதிலும் பார்க்க உற்பத்திப் பெருக்கத்துக்கான ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமை.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் இன்று மாலை செல்வி நாக பூஷணி பரம்சோதி "ஆண்டவனை அடையும் வழிகள்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

## பால் விநியோகம்

இணுவிலில் இருந்து யாழ்ப்பாணத்து பல் நிலையத்திற்கு பால் கொண்டுசெல்வதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் ரூபா 250/- பிணைப்பணமாகக் கட்டப்படவேண்டும். ஒரு பிரயாணத்தின் சலார் தொகை குறிப்பிடப்பட வேண்டும். 7-5-63 ன் பின் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விப்பத்திரங்கள் யாவும் காரியதரிசிக்கு பதிவஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். தபால் அட்டையில் 'பால் கேள்விப் பத்திர விண்ணப்பங்கள்' எனக் குறிப்பிடவும். காரியதரிசி, யாழ். மாவட்ட கூட்டுறவு பால் பண்ணை சமாசம், இணுவில். 970


## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

**வைத்தியர் பரிபூரணுனந்தர்**
கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.



**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## மந்திரி மீது குற்றச்சாட்டு

கண்டி, வியாழன்

தற்போதைய உள்நாட்டமைச்சர், காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைகளைக் கடைப்பிடித்து செயலாற்றவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி. பி. சில்வா கண்டி மாநகரசபைக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். உத்தேச உள்ளூராட்சி விசாரணை மசோதா மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைக்குறைப்பதற்கு திரு. மைதிரிபால சேனநாயக்கா நடவடிக்கைகள் எடுத்துவருவதாகவும் அவர் குற்றம்சாட்டினர்.

## ரஷ்யா சமாதானத்தை விரும்புகிறது

உடுப்பிட்டி, வியாழன்

"கம்யூனிஸ வைரிகளும், முதலாளித்துவ அடிவருடிகளும் கூறுவது போல ரஷ்யாவில சர்வாதிகாரம் இருப்பது உண்மையானுல் அங்கு நாற்பது வருடங்களில் விஞ்ஞானக் கல்வி, கலை, வாழ்க்கைத் தரம், மக்கள் கலாச்சாரம் என்பன மற்ற நாடுகளிலும் பார்க்க வளர்ந்திருக்க முடியாது" என்று கரவெட்டி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தில் சோவியத் ஸ்தானிகருக்கு அளிக்கப்பட்ட தேநீர் விருந்து பசாரக் கூட்டத்தில் பேசுகையில் திரு. எம். பெடக்கோவ் குறிப்பிட்டார். கியூபா நெருக்கடியிலும் சுயஸ் கால்வாய் பிரச்னையிலும் ரஷ்யா நடந்துகொண்ட விதத்திலிருந்தே ரஷ்யாவின் சமாதான நோக்கம் தெளிவாகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## கண்டி எம். எம். ஸி. விவகாரம்

### மாநகரசபை கோரிக்கை

கண்டி, வியாழன்

கண்டி மாநகரசபை அங்கத்தவரான திரு. ஜி. என். எஸ். ஹமீது, மேயர் தெரிவில் கலந்துகொள்ளாதவாறு நித்தம்பூவா பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது குறித்து உடன் விசாரணை செய்யுமாறு பிரதமரைக் கோரும் தீர்மானமொன்று கண்டி மாநகரசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதுசம்பந்தப்பட்ட பிரேரணையை சபையில் சமர்ப்பித்துப் பேசிய திரு. ஈ. எல். சேனநாயக்கா, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் தமது உரிமையை உபயோகிக்க முடியாது தடுத்தது பாரதூரமானதொரு தலையீடு எனத் தெரிவித்து இவ்வித தலையீடு அங்கத்தவரின் சுதந்திரத்தை பெரிதும் பாதித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

கொழும்பு, வியாழன்

ஹோமகமவைச் சேர்ந்த 'மெக்கானிக்' ஒருவர் கழுத்து, முகம், தோள் ஆகிய இடங்களில் எரி காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


## தேவை

1. பெண் விற்பனையாளர் 2. தொழிலாளி 3. ஆண் உதவியாளர்

| | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| வயது:- | 20 — 40 | 20 — 40 | 20 — 30 |
| பிணை:- | ரூபா 100/- | ரூபா 150/- | ரூபா 100/- |
| தராதரம்:- | கனிஷ்டதராதரம் | — | 8-ம் தரம் |
| வேதனம்:- | ரூபா 70/- | ரூபா 75/- | ரூபா 50/- |

விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் கூட்டுறவு ஆணையாளர் 355, காவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு மே மாதம் 7-ம் திகதிக்குமுன் அனுப்பிவைக்கவேண்டும். விண்ணப்பிப்போர் மே மாதம் 9-ம் திகதி காலை 10 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அதே விலாசத்தில் சமூகம் கொடுக்கவேண்டும்.

இணுவில்
2—5—63

காரியதரிசி,
யாழ். மாவட்ட கூட்டுறவு
பாற்பண்ணை சமாசம்.



அம்மா எனக்கு தினந்தோறும் மாமைட் தருகிறதால் வகுப்பிலும் விளையாட்டுக் களத்திலும் நான் சுறுசுறுப்பாய் இருக்கிறேன்



நாம் யாவரும் நன்ருய் சாப்பிடுகிறோம் அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறோம். பலத்திற்கும்வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒருபாகமாக நீங்கள் மாமைட் தினசரி அருந்திவர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமாளுல் கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மைமாட்டை சூப், கறி முதலியவற்றில் சேர்க்கும்பொழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும்பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க
விட்டமின்களை
ஏராளமாகக் கொண்ட
ஓர் தாய்கறி ஆகாரம்.




**மாமைட்**

# இந்தியாவில் உணவுக்கலப்படத்தை தடுக்க கடும் சட்டம்

## 6 வருஷ சிறைத்தண்டனைக்கு வழிசெய்யும் மசோதா

புதுடில்லி, மே.2

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனைவிதிக்கும் சட்டமொன்றைக் கொண்டுவருவதற்கு இந்திய அரசாங்கம் யோசித்துள்ளது.

லோகசபையில் உணவுப் பொருள் கலப்படம் சம்பந்தமாக நடைபெற்ற அரைமணி நேர விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் இந்திய சுகாதார மந்திரி டாக்டர் சுசீலா நய்யார் இத்தகவலைத் தெரிவித்தார்.

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்பவர்களுக்கு முதல் தடவை 6 மாதச் சிறைத் தண்டனையும் இரண்டாவது தடவையில் மூன்று வருடச் சிறைத் தண்டனையும் மூன்ருவது தடவையில் ஆறு வருடச் சிறைத் தண்டனையும் விதிப்பதற்கு இச்சட்டத்தில் வசதிசெய்யப்படும்.

உணவுக் கலப்படத்தைக் கண்டுபிடிக்கும் இன்ஸ்பெக்டர்களுக்கு இரண்டு சாட்சிகளிருக்க வேண்டுமென்றும் வழக்குகள் தொடரும் ஏற்பாடுகளை மத்திய அரசாங்கமே கவனிக்குமென்றும் சுகாதார மந்திரிதெரிவித்தார்.

பிரஜா சோஷலிஸ்ட் அங்கத்வர் திரு. எச். வி. காமத் பேசுகையில் உணவுக்கலப்படம் செய்வது இப்பொழுது அதிகரித்துள்ளதென்றும் கலப்படம் செய்வோருக்கு மக்கள் முன்னிலையில் வைத்து சாட்டையடி கொடுக்கவேண்டும் என்றும் கூறினர். அவர்களுக்கு நீண்டகால சிறைத் தண்டனையும் பின்னர் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு சொத்துகள் பறிமுதல் செய்யப்படவேண்டுமென்றும் திரு. காமத் கூறினர்

## உகண்டா – தங்கனிக்கா ஒப்பந்தம்

உகண்டா, மே 1

உகண்டாவும் தங்கனிக்காவும் பரஸபரம் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவிருக்கின்றன. உகண்டா வெளி விவகார மந்திரியும் தங்கனிக்கா பாதுகாப்பு மந்திரியும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவில் இது அறிவிக்கப்பட்டது. கெனயாவில் பொதுத் தேர்தல் முடிவடைந்தவுடன் கென்யாவும் இந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்படுமாம்.

## சீனக் கப்பல் ஆழ்த்தப்பட்டது

டோக்கியோ, மே 2

கொரியகடலுக்குச் சமீபத்தில் சீன சரக்குக் கப்பல் ஒன்றை இனந்தெரியாத விமானம் ஒன்று குண்டுவீசி ஆழ்த்திவிட்டதென்று ஒரு செய்தி தெரிவிக்கிறது. இக்கப்பலிலிருந்த 55 சிப்பந்திகளும் ஜப்பானிய மீன்பிடிக் கப்பல் ஒன்றினல் காப்பாற்றி கரை சேர்க்கப்பட்டனர்.

## 469 போர்க் கைதிகள் விடுதலை

ஷில்லாங், மே 2

சீனரிடமிருந்த இந்திய போர்க் கைதிகளில் மேலும் 469 பேர் நேற்று வடகிழக்கு எல்லை ஏஜன்ஸிப் பகுதியில் சீன செஞ்சிலுவைச் சங்க தூதுகோஷ்டியினல் இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தூதுகோஷ்டியிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்களில் 27 பேர் நோயுற்றவர்கள். இக்கோஷ்டியில் அதிகாரிகள் எவரும் இல்லை. பயனியர் படையையும் சென்னை ரெஜிமெண்டையும் சேர்ந்தவர்கள் தான் பெரும்பாலானவர்கள்.

# பிரிவினையை காஷ்மீர் மக்கள் எதிர்ப்பர்!

## பக்ஷிகுலாம் அறிவிப்பு

ஸ்ரீநகர், மே. 2

"காஷ்மீர் பள்ளத்தாக்கையோ அல்லது ராஜ்யத்தையோ பிரிவினை செய்வதை காஷ்மீர் மக்கள் ஏற்கமாட்டார்கள்" என்று காஷ்மீர் பிரதமர் பக்ஷிகுலாம் முகம்மது நேற்று ஸ்ரீநகரில் நடைபெற்ற மேதினக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

ாகஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குமுன் தற்காலிக ஏற்பாடாக ஐ. நா. வின் நிர்வாகத்தின்கீழ் காஷ்மீரை விட்டுவைக்க வேண்டுமென்ற பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானின் யோசனையையும் காஷ்மீர் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று காஷ்மீர் பிரதமர் கூறினர்.

ராஜ்யத்தின் உறுதிப்பாட்டையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதற்கு காஷ்மீர் மக்கள் எந்தவித தியாகத்துக்கும் தயாராக இருக்கிருர்களென்றும் எந்தஅரசும் காஷ்மீர் நிலப்படத்தைத் திருத்த முடியாதென்றும் பச்ஷிகுலாம் முஹம்மது தெரிவித்தார்.

# 'பிரச்சினைகள் தீர கட்டுப்பாடு அவசியம்'

## ஸ்தல ஸ்தாபன மந்திரி அபிப்பிராயம்

பேராதனை, வியாழன்

'இங்குள்ள மக்களுக்கு இருக்கும் அதிக ஜனநாயக சுதந்திரம் தான் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முடியாதபடி அரசாங்கத்தைத் தடைசெய்கிறது. எனவே சில கட்டுப்பாடுகள் அவசியமாகப்படுகிறது' என ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீரா கெலிஓயாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

உடுநுவரைத் தொகுதி மக்கள் மந்திரிக்கு வரவேற்பளிக்குமுகமாக ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. சமரவீரா மே[illegible] பேசுகையில் கூறியதாவது:

### 'துப்பாக்கி முனையில் ஆட்சி'

சில வெளி நாடுகளில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு துப்பாக்கி முனையில் ஆட்சி நடைபெறுகின்றது. ஆனல் இங்குள்ள மக்கள் அவ்வித ரீதியில் அமைந்த அதிகாரங்களை என்னிடமோ, பிரதமரிடமோ ஒப்படைக்கவில்லை.

இவ்விதமான அதிகாரங்களை எம்மிடம் ஒப்படைக்க மக்கள் விரும்பவில்லையென நான் நினைக்கின்றேன். இந்த அதிகாரங்களைத் தரும்படி நான் மக்களிடம் கோரவில்லை.

### 'தண்டிக்க அதிகாரமில்லை'

பொதுச் சொத்துக்களைத் தவறுப் பயன்படுத்துபவர்களுக்கு போதிய தண்டனை அளிக்க மக்கள் எமக்கு அதிகாரம் அளிக்கவில்லை. குற்றவாளிகளை இடமாற்றம் செய்யும் அதிகாரம் தான் எமக்கு உண்டு இவ்வித இடமாற்றங்களினல் பிரச்னைகளைத் தீர்த்துவிடமுடியாது..

### 'சர்வாதிகாரம்'

குற்றம் செய்யும் உத்தியோகஸ்தர்களைத்தண்டிக்கமேலதிக அதிகாரங்கள் தேவை. சர்வாதிகார ஆட்சி நடைபெறும் நாடுகளில் இத்தகையவர்களுக்கு எவ்வித தண்டனை அளிக்கப்படுகிறதோ அவ்விதமான தண்டனைகள் இவர்களுக்கு இங்கு அளிக்கப்படவேண்டும்.

### 'சுதந்திரம் அலுத்துவிட்டது'

இங்கிருக்கும் அமித சுதந்திரம் மக்களுக்கு அலுத்து விட்டது. குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை அளிக்கக்கூடிய அதிகாரமுள்ள அரசாங்கம் இங்கு ஆட்சி செலுத்தத்தொடங்கினல் நிலைமை சரியாகும்.

சில தலைவர்கள் தொழிலாளர்களைத் தூண்டிவிடுகிருர்கள். தமது சொந்த நலன் கருதியே இவர்கள் இவ்விதம் செய்கிருர்கள். இவ்வித தலைவர்கள் தொழிலாளர்கள் தமது கடமையைச் செய்ய வேண்டுமெமென்பது பற்றி எடுத்துக் கூறுவதில்லை.

இந்தத்தலைவர்கள் உண்மையில் நாட்டுப்பற்றுக் கொண்டிருந்தால் இவர்கள் தொழிலாளர்களின் கடமை பற்றியும் அவர்கள் நிறைவேற்ற வேண்டிய சேவைபற்றியும் புத்திமதி கூற வேண்டும்.

# 'இந்தி திணிப்பை எதிர்த்து கிளர்ச்சி'

## ராஜாஜி, அண்ணுதுரை எச்சரிக்கை

சென்னை, மே 1

இந்திய யூனியனின் ஆட்சி மொழியாக, ஆங்கிலத்தின் தற்போதைய நிலை நீடிக்கப்படாவிட்டால், இந்தி திணிப்பை எதிர்த்து தாங்கள் நீடித்த கிளர்ச்சியை நடத்தவேண்டிவரும் என சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. ராஜகோபாலாச்சாரியும், தி. மு. க. தலைவர் திரு அண்ணுதுரையும் மத்திய அரசாங்கத்தை எச்சரிக்கை செய்துள்ளனர்:-

லோகசபை நிறைவேற்றியுள்ள ஆட்சிமொழிகள் மசோதாவை எதிர்க்கும்பொருட்டு மக்கள் எவ்வித தியாகத்துக்கும் தயாராக இருக்கவேண்டுமென இவர்கள் கேட்டுள்ளார்கள்.

மரீனு கடற்கரையில் நடைபேற்ற பொதுக் கூட்டத்திலெயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக்கும் அரசியல் சட்டஷரத்தை ரத்துச் செய்யவேண்டும் என்ற கருத்தை ஊர்ஜிதம்செய்து தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

ராஜாஜி பேசுகையில் கூறியதாவது:-

### சோதனைக்காலம்

இந்தி பேசப்படாத பகுதி மக்களுக்கு இது சோதனைக்காலம். இந்தி பேசுவோரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட எவ்வித தியாகத்துக்கும் தயாராக இருக்கவேண்டும். தியாகமின்றி எதுவும் சாதிக்கமுடியாது.

இந்தி பேசாத மக்களின் மீது இந்தி பேசுவோரின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு அரசியல் சட்டம் வழிவகுக்குமாதலால் எந்தக் கட்டத்திலும் இந்தி ஆட்சிமொழியாவதை எதிர்த்தேயாகவேண்டும்.

## மேற்கு இரியான்

ஹாலண்டியா, மே 1

மேற்கு இரியான் இன்று இந்தோனேஷியாவின் 17-வது மாகாணமாக, அந்நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. சோவியத் ஜனதிபதி பிரஸ்னேவ், பிரதமர் குருஷ்சேவ் ஆகியோர் இது சம்பந்தமாக ஜனதிபதி சுகர்னேவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

## நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்

டமாஸ்கஸ், மே 1

சிரியாவின் முன்னுள் ஜனதிபதியும் மற்றும் 21 தலைவர்களும் தேசியப்புரட்சி சபையினரால் பந்தோபஸ்து நீதிமன்றத்தின்முன் இன்று ஆஜர் செய்யப்பட்டனர். தலைவர்களில் இரு முன்னுள் பிரதமர்களும் இருக்கின்றனர். சென்ற மார்ச்மாதத்தில் சிரியாவில் தேசயப் புரட்சி ஏறபட்பொழுது இவர்கள் கைது செய்யப்பட்டனர். ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து சிரியா 1961-ம் ஆண்டுபிரிந்து தனித்தியங்குகையில் மந்திரிகளாக இருந்தவர்களும் இருபத்தொருபேரில் உள்ளடங்கி இருக்கிருர்கள்.

## அந்தரத் தண்டவாளத்தில் ஓடும் அதிசய கார்

டோக்கியோ, மே. 3

அந்தரத்தில் அமைக்கப்படும் தண்டவாளங்களின் மீது மணிக்கு 125 மைல் வேகத்தில் ஓடக்கூடிய ரயில்வே கார் ஒன்றின் மாடலை ஜப்பானிய சர்வகலாசாலைப் பேராசிரியர் ஒருவர் தயாரித்திருக்கிருர். இது விரைவில் அனைவரும் காணக்கூடியவகையில் வெள்ளோட்டம் விடப்படும்.

இந்த ரயில்வேக் காருக்கு 'வானக்கார்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. டோக்கியோவிலுள்ள மெய்ஜி சர்வகலாசாலையின் என்ஜனியரிங் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் ஹிடேயா ஃபுகுடா இதைத் தயாரித்துள்ளார்.

விமானத்தின் இறைக்கை முனைகளை வெட்டிவிட்டால் எவ்விதம் காட்சியளிக்குமோ அதே போன்ற வடிவமைப்புக் கொண்டதாக இந்த ரயில்வே கார் உள்ளது. வரிசையாகத் தூண்களை நிறுத்தி அதன் மேல் அமைக்கப்படும் தண்டவாளங்களின் மீது இந்த ரயில்வே கார் ஓடும். மின்சாரத்தால் இயங்கும் இந்தக் கார் 80 பேர்களை ஏற்றிக்கொண்டு மணிக்கு 125 மைல் வேகத்தில் செல்லக்கூடியதாகும் என்றுமேற் படி பேராசிரியர் கூறினர்.

# மாஸ்கோவில் மாபெரும் ஏவாயுத அணிவகுப்பு

## லிஸ்பனில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தடியடி

லண்டன், மே 2

உலக தொழிலாளர் தினமான மே தினம் நேற்று உலகின் பலபாகங்களிலும் கொண்டாடப்பட்டது.

மாஸ்கோவில் மே தினத்தையொட்டி நடைமெற்ற மாபெரும் ராணுவ அணிவகுப்பை கியூபா பிரதமர் டாக்டர் பிடல் காஸ்டிரோவும் கண்டு மகிழ்ந்தார். மே தின வைபவத்தில் சோவியத் பாதுகாப்பு மந்திரி மலினேவ்ஸ்கி பேசுகையில் ஆக்கிரமிப்பாளர் எவரையும் நொடிப் பொழுதில் அழித்துவிடும் ஆற்றலுள்ள ஆயுதங்கள் சோவியத் யூனியனிடமிருக்கிறதென்றும் எனினும் உலக சமாதானத்தையே சோவியத் யூனியன் விரும்புகின்றதென்றும் கூறினர். மாஸ்கோ மே தின அணுவகுப்பில் பிரமாண்டமான ஏவாயுதங்களும் இடம் பெற்றன.

### பீக்கிங்கில்

நவசீனத் தலைநகரான பீக்கிங்கில் நேற்று நடைபெற்ற மே தினக்கொண்டாட்டத்தில் சுமார் 30 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர். ஊர்வலமும் இடம் பெற்றது. சென்றசில வருடங்களில் போல் இவ்வருடமும் மே தின வைபவத்தில் ராணுவ அணிவகுப்பு இடம் பெறவில்லை.

### புதுடில்லியில்

புதுடில்லியில் சுமார் நூறு தொழிற்சங்கங்களும் சம்மேளனமும் மே தினத்தைக் கொண்டாடின. ஊர்வலங்களும் இடம் பெற்றன. சென்னை, மதுரை, திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலும் மே தினக் கூட்டங்கள் நடைபெற்றன.

### அல்ஜீரியாவில்

புதிதாக சுதந்திரம் பெற்ற அல்ஜீரியாவும் நேற்று மே தினததை உற்சாகத்துடன் கொண்டாடியது. பிரான்ஸ், யூகோஸ்லேவியா, டோக்கியோ மற்றும் பல இடங்களிலும் மே தினக் கொண்டாட்டங்கள் இடம் பெற்றன.

### லிஸ்பனில் தடியடி

லிஸ்பனில் மே தினத்தையொட்டி நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றின் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

## இந்திய ஒலிபரப்பு

புதுடில்லி, மே 1

இந்தியாவில் 31 வானெலி நிலயங்கள் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புதுடில்லி, மே 1

பிரிட்டிஷ் காலனி மந்திரி திரு. [illegible] சாண்[illegible] இன்று பிற்பகல் டில்லி வந்தார.

மெய்யான வாக்கு

என் வாழ்விலே எவ்வளவோ சோதனைகள் ஏற்பட்டுள்ளன. கடுமையான சோதனையை அதிகம் விரும்புகிறேன். ஏனெனில் அதனால் தெய்வத்துடன் என் உறவு கூடி அவரது அருளிலே எனக்கு அதிக நம்பிக்கையும் ஏற்படுவதாக இருக்கிறது.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழுப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 20 உ (3-5-63)

## அவசரகாலம் நீங்கியது

சென்ற புதன்கிழமை இரவுடனே இலங்கையில் அவசரகாலம் முடிவுக்கு வந்துள்ளது. இது மகிழ்ச்சியளிக்கும் செய்தியாகும். அவசரகாலத்தைபல மாதங்களுக்கும் முன்பாகவே முடித்திருக்க வேண்டும். இது இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கப்பட்டு வந்துள்ளது. எல்லாக் கட்சிகளும் மட்டுமன்றி அரசாங்கக் கட்சியிலும் பலர் அவசரகாலத்தைமுடிக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவித்ததை இப்போதாவது பிரதமமந்திரி ஏற்றுக்கொண்டது வரவேற்கத்தக்கதாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே இலங்கைத் தமிழரசுக்கட்சியினர் நடத்திய சத்தியாக்கிரக இயக்கத்தைச் சாதாரண சட்டத்தால் சமாளிக்க முடியாதென்பதை உணர்ந்து 1961-ம் வருடம் ஏப்ரல் மாதம் 17-ந் திகதி அவசரகாலநிலை அரசாங்கம் பிரகடனம் செய்தது. அவசரகாலத்திலே பலபல அட்டூழியங்கள் இருமாகாணங்களிலும் நடைபெற்றதாகப் புகார்கள் கூறப்பட்டன. ஆனால் அதுபற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தமிழ்ப்பேசும் மக்கள் தங்கள் மொழி உரிமையை இழந்ததுடன் மட்டுமல்லாமல், தாங்கள் இந்நாட்டில் மானத்துடன் நிம்மதியாக வாழவும் முடியாதோ என்று மனம் உடையக் கூடிய வகையில் அவசரகால அதிகாரங்கள் அமுல் செய்யப்பட்டுள்ளன. "ஜனநாயகம்" என்று கூறப்படும் இந்த அரசியல் முறையிலே தங்கள் நியாயமான உரிமைகளைப் பெறக் கிளர்ச்சியும் செய்ய முடியாதபடி அவசரகால பிரகடன மூலம் தடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் திகைத்தனர். சில தடைஉத்தரவுகள் ஏற்கெனவே நீக்கப்பட்டாலும், பொலிஸ், இராணுவம் இவற்றின் மனப்பான்மையும் நடத்தையும் இங்கு மாறுகவே இருந்துவந்துள்ளது. இப்போது அவசரகாலம் நீக்கப்பட்டுவிட்டதால் பொலிஸின் மனப்பான்மையில் விசேஷ மாறுதல் ஏற்படுவதுடன், பொலிஸைப்பற்றிப் பொதுமக்களுக்குள்ள பயம் வெகுவாக நீங்கக்கூடியதாக இருக்கு மென்றே நம்புகிறோம்.

அவசரகாலம் நீக்கப்பட்டாலும் அதன் அடிப்படைப் பிரச்னை நீங்கவில்லை. இந்நாட்டிலே இரண்டாவது முக்கிய சமூகமாக வாழும் தமிழ்மக்களுக்கு அவர்களது மொழி முதலிய அடிப்படை உரிமைகளை மீண்டும் வழங்கினால்தான் பிரச்னை நீங்க முடியும். இங்கு மொழிச் சட்டத்தை அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றியதால்தான், சமூகஒற்றுமை குலைந்ததாக "மஞ்செஸ்டர் கார்டியன்" பத்திரிகைசரியாக சுட்டிக்காட்டியுள்ளது. சமூக ஒற்றுமை குலைந்ததால் நாட்டின் முன்னேற்றம் தடைபட்டுள்ளதாக அரசாங்கக்கட்சியினருள்ளிட்டு, பொதுவாகப் பலரும் உணர்ந்திருக்கின்றார்கள். சமூக ஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்த அரசாங்கம் என்ன செய்யப்போகின்றதென்பதே கேள்வி.

இலங்கையிலே சிறுபான்மை சமூகத்தினரைப் பாதிக்கக் கூடிய வேற்றுமை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலே இடதுசாரிக்கட்சியினர் நடத்திய பிரமாண்டமான மேதினப்பொதுக் கூட்டத்திலே நிறைவேற்றிய தீர்மானத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வேற்றுமை நடவடிக்கைகளை நீக்கினால்தான் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட முடியும் என்று கருத்துப்பட அத்தீர்மானம் கூறுகிறது. திரு. பிலிப் குணவர்த்தனவின் எம். ஈ. பி. கட்சியும் சேர்ந்து இதற்கு ஒப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. சிங்கள பொதுமக்களிடையிலும் இவ்வித கருத்துப் பலப்பட்டுள்ளதால் அரசாங்கம் அவசரகாலத்தை நீக்கியதைப் பின்பற்றி சமூக, மொழிப்பிரச்னைகளைத் தீர்க்க இப்போது தக்க நடவடிக்கைகளை எடுக்கக் கடமைப்பட்டுள்ளது.

# உலகில் ஆங்கில மொழியின் உபயோகம்

ஐக்கியநாடுகள் சபை, மே 1 ரேபன் செய்தி நிறுவனம் இங்கு நடத்திய மதிப்பீடு ஆராய்வின்படி, ஆசியாவின் தலையாய அகில உலக மொழியாக இருப்பது ஆங்கிலம் தான் என்று திட்டமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசியாவின் பல்வேறு நாடுகளிலிருந்து வருபவர்கள் இங்கு ஐக்கியநாடுகள் சபையில் ஆங்கிலத்தையே தமது கருத்தை வெளியிடப் பயன்படுத்துகின்றனர்.

உலக வரலாற்றில் இதற்கு முன் ஆங்கிலத்தைப் போல் வேறு எந்த மொழியும் மக்களுக்குப் பயன்பட்டதில்லை என்று ஓர் அறிக்கை கூறுகிறது. போருக்குப் பின்னர் ஆங்கிலம் அகில உலக மொழியாக வளருவதற்கு இரண்டு அம்சங்கள் காரணம் ஆகும் என்று இங்கு கருததுத் தெரிவிக்கின்றனர். ஒன்று, உலகப் பெரும் போரின் காரணமாக ஐக்கிய அமெரிக்கா பெரும் வல்லரசாகி வடிவு கொண்டது; இரண்டு, ஆட்சிமொழி அல்லது துணை மொழியாக ஆங்கிலத்தைக் கொண்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆசிய - ஆபிரிக்க நாடுகள் தோன்றுகின்றன.

ஆசியாவில் ஆங்கில மொழி எவ்வாறு பயன படுத்துகிறது என்பதை கீழே குறிப்பிட்டிருக்கும் விவரங்கள் தெளிவுபடுத்தும்.

ஆப்கானிஸ்தானம்:- உயர்நிலைப்பள்ளிகள் அனைத்திலும் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. துணை மொழியாகவும் ஆங்கிலம் இருந்து வருகிறது.

இந்தியா - பாகிஸ்தானம்:- ஆங்கிலம் ஆட்சமொழியாக இருக்கிறது.

நேபாளம்:- ஏழும் வகுப்பிலிருந்து, கல்லூரி வரையில் ஆங்கிலம் கட்டாயப் பாடமாகும்.

செஞ்சீனு:- உயர்நிலைப்பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படவேண்டும். பீகிங் வானொலி ஆங்கிலப்பாடம் போதிக்கிறது. சீனக் கம்யூனிஸ்டுகள் "மொழியில் வகுப்பு பேதம் இல்லை" என்கின்றனர்.

தேசியசீனு:- தைவானிலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. ஆங்கிலம் ஏழாம் வகுப்பிலிருந்து போதிக்கப்படுகிறது.

இந்தோனேஷியா, பர்மா, தாய்லாந்து:- ஆங்கிலம் துணைப்பாடமாகப் போதிக்கப்படுகிறது.

இலங்கை:- 1961-ம் ஆண்டில் ஆங்கிலததின் இடத்தில் சிங்களத்தை ஆட்சிமொழியாக்கினார்கள். இதனால் மொழிச் சிக்கல்களும் அதனால் வகுப்புப் பிரச்னைகளும் ஏற்பட்டு பெரும் கலகம் விளைந்தது.

மலேயா:- ஆங்கிலம் ஆட்சிமொழி.

ஜப்பான்:- ஆங்கிலம் துணைப்பாடமாக இருக்கிறது. எல்லா நிலைப்பள்ளிகளும் ஆங்கிலத்தைக் கற்பித்தல் வேண்டும்.

கம்போடியா:- ஆங்கிலம்விருப்பப்பாடம். பிரெஞ்சுமொழி கற்பிக்கப்பட வேண்டும்.

லாவோஸ், வியட்நாம்:- பிரெஞ்சு மொழியின் இடத்தை ஆங்கிலமொழி துணைப்பாடமாகமாற்றிக் கொஞ்சம்கொஞ்சமாக அடைந்து வருகிறது

பிலிப்பைன்ஸ்:- ஆங்கிலம், காகேலாக், ஸ்பானிஷ் ஆகியன ஆட்சிமொழிகள். போதனைமொழியாக ஆங்கிலமே எல்லாப் பள்ளிகளிலும் இருந்து வருகிறது. அதுவே அந்நாட்டில் செல்வாக்குப் பெற்ற மொழி.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து:- ஆங்கிலம் ஆட்சிமொழி.

தென் கொரியா:- உயர் நிலைப்பள்ளி மட்டத்தில் ஆங்கிலமொழி இப்போது இங்கு பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டு வருகிறது.

ஆங்கிலமே அதில் உலக மொழி என்று பரவலாகக் குறிப்பிட்டுக் காட்டும் படி 1955-ம் ஆண்டில் பாண்டுங்கில் நடைபெற்ற ஆபிரிக்க - ஆசிய நாடுகளின் மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டதை ஆசிய அரசியல் நிபுணர் ஒருவர் இங்குக் குறிப்பிட்டுக் காட்டினார். இம்மகாநாட்டில் ஆங்கிலமே ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 'இலங்கை எழுத்தாளன்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வியா.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுக்கூட்டம் திரு. கனக. செந்திநாதன் தலைமையில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அன்றையதினம் 'இலங்கை எழுத்தாளன்' என்னும் மாதாந்தப் பத்திரிகையின் வெளியீட்டு விழாவும் நடைபெற வருகிறது. திரு. எப். எக்ஸ். சி. நடராசா வெளியீட்டு விழாவை நடத்திவைப்பார். திருவாளர்கள் எஸ். பொன்னுத்துரை, ஏ. எம். ரஹ்மான், ரா. பாலகிருஷ்ணன் ஆகியோர் இக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார்கள்.

## சில இடங்களில் யாழ்ப்பாண 'மெயில்' நிற்கமாட்டாது

கொழும்பு, வியாழன்

இம்மாதம் ஆரம்பத் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் செல்லும் 'மெயில்' புகையிரத வண்டி எழுதுமட்டுவாள், மிருசுவில், மீசாலை, சங்கத்தானை, தச்சன்தோப்பு ஆகிய நிலையங்களில் நிற்கமாட்டாது என புகையிரதப் பகுதி அறிவித்தல் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேற்குறிப்பிட்ட இடங்களில் புகையிரத வண்டி நிற்காமல் விட்டால் வண்டி உரியநேரத்தில் ஓடக்கூடியதாயிருக்கும். இதனால் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் புகையிரதம் 20 நிமிஷம் பின்னர் புறப்படலாம் என்று அறிக்கை தெரிவிக்கின்றது.

எழுதுமட்டுவாள், மிருசுவில் மீசாலை, சங்கத்தானை, தச்சன் தோப்பு ஆகிய நிலையங்களிலுள்ள பிரயாணிகளுக்காக பளை, கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கு பஸ் வசதிகள் செய்யப்படுமெனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிரி விடுதலை

மாவிட்டபுரம், புதன்

அச்சுவேலியைச் சேர்ந்த சின்னக்குட்டி ஆசை என்பவர் சட்டவிரோதமாகக் கொட்டில் போட்டு கள்ளு விற்றதாக அச்சுவேலி கலால் இலாகாவினரால் மல்லாகம் நீதிபதி வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிதரப்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா நீதிபதியிடம் இவ்வழக்கைத்தாக்கல் செய்ய கலால் இலாகா கமிஷனரால் தான் முடியும் என்றும் அல்லது அவரிடம் தத்துவம் பெற்ற வேறு ஒரு உத்தியோகத்தர்தான் இவ்வழக்கைத் தாக்கல் செய்ய முடியுமென்றும் தெரிவித்து இந்த வழக்கில் அப்படித் தத்துவம் பெருமையால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது சட்டவிரோதமானது என்று தெரிவித்தார்.

நீதிபதி வழக்கறிஞரின் ஆட்சேபனையை ஏற்று எதிரியை விடுதலைசெய்தார்.

## குருநாகல மேயர் வந்து திரும்பினர்

யாழ்ப்பாணம், வெள்ளி

குருநாக்கல மேயர் திரு. டி. பி. வெலகெதர தமது குடும்பத்தினருடன் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். யாழ்ப்பாணம் வாடி வீட்டில் மூன்று தினங்கள் தங்கியிருந்துவிட்டு அவர் குருநாக்கலுக்குப் பிரயாணமானர்.

குருநாக்கல் மேயர் கீரிமலை, காங்கேசன் துறை, நாகதுவீபம் ஆகிய இடங்களுக்குப் விஜயஞ் செய்து பார்வையிட்டார். யாழ்ப்பாணத்தில் தாம் தங்கியிருந்த போது கண்ட காட்சிகள் தமது உள்ளத்தைக் கவர்ந்து விட்டதாக அவர் கூறினர்.

## ஐயாறன் எழுதுவது

அன்று மேதினம். ஒருகடையில் வேலைசெய்யும் ஒரு பையனுக்கு மேதினம் என்றால் என்ன என்ற சமாச்சாரம் ஒன்றுமே தெரியாது. மெதுவாக என்னிடம் வந்தார். காலை 5 முதல் இரவு 10 மணி வரையில் கடையிலே வேலை செய்யவேண்டி இருப்பதாயும், இடையில் இரண்டொரு மணி நேரம்தான் ஓய்வென்றும், வேறு எங்காவது நல்ல இடத்தில் வேலைகிடைத்தால் நல்லதென்றும் சொன்னர்.

உலகில் 12 மணி நேர வேலையை எதிர்த்து 8 மணி நேரமாகஆக்கிய தினத்தைத்தான், மே விழாவாக உலகெல்லாம் கொண்டாடுகிறார்கள். தொழிலாளர் மட்டுமல்ல முதலாளிகளும் இவ்விழாவைக் கொண்டாடுவதைப பார்க்கின்றோம். இடது மட்டுமன்றி வலதுசாரிகளும் கொண்டாடுகின்றார்கள். தொழிலாளர் திருப்தியுடன் தேகதிடத்துடன் இருந்தால்தானே தொழிலும் லாபகரமாக நடக்க முடியும்?

* * *

ஆனால் அதே தினத்தில், இதுகுறித்தெல்லாம் ஒன்றுமே தெரியாத ஒரு பையன் வேலை நேரத்தைப்பற்றிக்கூறிய புகார் என்மனதில் 'சுருக்' என்று தைத்தது. அப்புகார் உண்மையானல் ஒருநாளைக்கு 14மணி நேரம் வேலைவாங்கப்படுவதாக ஏற்படும். இன்னும்இந்தமாதிரி அவலப்படும் வாயில்லாப் பூச்சிகள் எவ்வளவுபேரோ!

ஒரு வேலையும் கிடைக்காமல் பலமாதம் அப்பையன் அவதிப்பட்டாராம். முடிவில் ஒருவேலை கிடைத்ததென்றாலும் அதுவும் இப்படி! பாவம்! அந்த இளம் உள்ளம் என்ன பாடுபடும்? மனக்கசப்பும், வெறுப்பும் இவ்வித இளம் உள்ளங்களில் வளர்வதாயின், முடிவில் இதெல்லாம் எங்கு கொண்டு சேர்க்கும்?

* * *

யாழ்ப்பாணத்திலே இம்முறை மேதினத்தன்று இரு ஊர்வலங்களைக் கண்டேன். ஒன்று இடதுசாரி, மற்றொன்று அரசாங்க எழுத்துவினைஞர். இடதுசாரி ஊர்வலம் ஒரே சிவப்புமயம் சிவப்புச்சட்டை, சிவப்புக் குல்லாய், சுத்தி சுத்திபோட்ட சிவப்புக்கொடிகள். மலைநாட்டுத் தொழிலாளருக்குப் பிரஜா உரிமை வழங்கவேண்டுமென்று இரு ஊர்வலங்களிலும் கோஷங்கள் எழுந்தன.

முற்றவெளியிலே ஒரு பஸ் தொழிலாளி மிக உணர்ச்சியுடன் பேசினர். சென்ற பஸ் வேலைநிறுத்தத்தில் 'கருங்காலி'யாக இருந்த ஒருவருக்குத் தங்கப் பதக்கம் அளிக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்தார். அவர் பேசியதிலிருந்து ஒருவிஷயம் தெளிவாயிற்று. அதிகாரிகளும் தொழிலாளரும் பரஸ்பர அன்பும் மரியாதையும் கொண்டால், பல தகராறுகள் ஏற்படவே செய்யாதென்பதுதான். ஆனால் உலகிலே அன்புக்குத்தான் அதிகப பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதே!

* * *

கைலாசபிள்ளையார் கோயில் தேர் விமர்சனத்திலே 'சுந்தரராஜன்'என்பதை 'ரு. கோவிந்தராஜன்' என்றும், 'நெல்லியடி' என்பதற்குப் பதில் 'நீர்வேலி' முதலிய இடங்களில் என்றும் சிறு திருத்தம் செய்யும்படி, தேர்கட்டிய சிற்பி எழுதுகின்றார். தவறுக்கு வருந்துகிறேன்.

* * *

உரியாயுலகினுக்கெல்லாம் போற்றிஉணாவென்னும் ஊர்வதுடையாய் போற்றி, எரியாய தெய்வச் சுடரே போற்றி, யேகமாமுண்டியுடையாய் போற்றி, அரியாயமரர்கட்கெல்லாம் போற்றி, அறிவேயடக்க முடையாய் போற்றி, கரியானுக் காழியன்றீந்தாய் போற்றி, கயிலை மலையானே போற்றி போற்றி.

— திருநாவுக்கரசர்

# "அரசியல் சுதந்திரம் எமக்கு வேண்டும்"

## யாழ். நகர மண்டப மேதின விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழ்த் தொழிலாளர்கள் இன்று உரிமையற்ற நிலையில் அடிமைகளாக வாழ்கிறார்கள். இழந்த உரிமைகளைப் பெற தமிழ்த் தொழிலாளர்கள் திடசங்கற்பஞ் செய்யவேண்டும். இந்த நாட்டில் எமக்கு அரசியல் சுதந்திரம் வேண்டும். எமது உரிமைகளைக் குறிப்பிட்ட ஒருவர்தான் பெற்றுத்தர வேண்டும் என்பதில்லை."

என்று திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற எழுதுவினைஞர் சங்க மேதின விழாவில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழ்மக்கள் சிங்கள மக்களுடன் சரிநிகர் சமானமாக வாழப் பிறந்தவர்கள். அடிமைகளாக வாழ அல்ல. சிங்கள மக்கள் நம்மை நசுக்குபவர்களாகவும் நாம் நசுக்கப்படுபவர்களாகவும் வாழமுடியாது.

ஒத்துழையுங்கள் என்று கூறும் இடதுசாரி இயக்கங்கள் இதுவரை எமக்கு என்ன செய்துவிட்டன என்று கேட்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இன்னும் அவர்களைத் தமிழர்கள் நம்பினல் என்ன நிலை ஏற்படும் என்று சொல்ல முடியாது. தொழிலாளர்கள் தம் உரிமையைக்கேட்டால் அக்கோரிக்கை இன்றைய அரசாங்கத்திற்கு வகுப்புவாதக் கூச்சலாகத் தெரிகிறது."

வட இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கப் பொதுக்காரியதரிசி திரு. ீ. ஆசீர்வாதம் பேசுகையில் தமிழ்த் தொழிலாளர்கள் ஒன்றுபடுவதன்மூலம் தமது உரிமைகளைப் பெறுக் கொள்ள முடியும் என்று குறிப்பிட்டார்.

### முதலாவது சட்ட நடவடிக்கை

எழுதுவினைஞர் சங்கப் பொதுக்காரியதரிசி திரு. இ. பாலசுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ் அரசாங்க ஊழியர்களின் இன்றைய அவல நிலையைப் போக்க நம்மிடம் பல வழிகள் உண்டு. முதலாவதுதான் சட்டநடவடிக்கை. நாம் அரசாங்கத்திற்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளோம். வழக்கின் முடிபு என்று வெளியாகிறதோ அன்றுதான் உண்மையான போராட்டம் ஆரம்பமாகும். வழக்கின் முடிவு அரசாங்கத்திற்கு தமிழர்களின் உண்மையான நிலையை தெளிவாக்கும். மானமுள்ள தமிழன் ஒருவனுவது இருக்கும்வரை இங்கு அரசாங்கம் நிம்மதியாக ஆட்சி செய்ய முடியாது."

இளந்தமிழர் மன்றம் சார்பில் கரிகாலன் பேசுகையில், இந்நாட்டில் தொழிலாளர்களைப் பலவீனப்படுத்தியது இடதுசாரிகளாகுமென்றும் நாட்டுக்காக உயிரையே திரணமாக மதித்து உழைக்கும் தமிழன் சுபிட்சமாக வாழ முடியவில்லையென்றும் தனித்து நிற்கக்கூடிய வல்லமை தமிழரசுக்கட்சிக்கு உண்டு என்றும் கூறினர்.

அகில இலங்கை நெசவுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஆ. ஹென்றி பேசுகையில் கூறியதாவது:

"வாழ்க்கைமுழுவதும் உழைத்துழைத்து உருக்குலைந்து ஒடிந்துபோன தொழிலாளியின் துயர் துடைக்க யாருமில்லை அத்துயரங்களை ஒன்றுதிரட்டினல் மிகப் பயங்கரமானமுறையில் பெரும் சக்தியாக இயங்கக் கூடியவை. இப்பேற்பட்ட உண்மைகளை நன்கு தெரிந்திருப்பவர்கள் தொழிர்சங்கவாதிகள். தொழிலாளர்களின் துயரங்களைப் பெரிதுபடுத்திப் பாட்டாளிகளை தம்வசப்படுத்தி மார்க்ஸீய சித்தாந்தத்தைப் புகுத்தவர்க்க போராட்டத்தை உருவாக்கி ஈற்றில் இரத்தக் களரியை உண்டாக்கி நாட்டில் பெரும் புரட்சி உண்டாகிறது. தொழிலாளர்கள் பொதுவாக படிப்பறிவு அற்றவர்கள். ஆழ்ந்து சிந்திக்கும் திறமையற்றவர்கள். எனவே அவர்கள் மனதில் நாத்திகக் கொள்கைகளும் புரட்சிவாதங்களும் தடையின்றி இடம்பெற்று விடுகின்றன"

இலங்கைத் தொழிலாளர் கழக உபதலைவர் திரு. கே. ஏ. இராமன் பேசுகையில் கூறியதாவது:

"அரசியலைப் பொறுத்தவரையில் மலைநாட்டு மக்களின் நிலைமையை இதர துறைத் தொழிலாளர்களும் அடைந்துவிட்டார்கள். மலையக மக்களின் அவல நிலையைப் போக்க தமிழரசுக்கட்சியினல்தான் முடியும். எனவே இதர தமிழ்த் தலைவர்கள் இடதுசாரிக்கட்சிகளை நம்புவதில் பயனில்லை.

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஐ. ஆ. இராமசாமி பேசுகையில் தமிழாசிரியர்கள் சிங்களம் படிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்த நிலைமை அன்னிய ராட்சிக் காலத்தில்கூட ஏற்பட்டதில்லை என்று குறிப்பிட்டார்.

சாவகச்சேரி எம். பி.யும் இலங்கை தொழிலாளர் கழக உபதலைவருமான திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

19-ம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியில் அமெரிக்கக் குடியரசில் தொழிலாளர் உரிமைக்கான ஒற்றுமையான போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டம் நடத்தியவர்கள் ஆரம்பத்தில் தமது வேண்டுகோளை நியாயமான முறையில் முதலாளி வர்க்கத்தினருக்கும் ஆட்சியாளருக்கும் எடுத்துக் கூறினர்கள். ஆனல் பலன் கிடைக்கவில்லை. அடுத்ததாக அவர்கள் எல்லா மேடைகளிலும், எல்லோரிடமும் தமது கோரிக்கை நியாயமானது, அதனை மறுப்பது மனிதத் தன்மையற்றது என்று விவாதித்தார்கள். அதனலும் பலன் கிடைக்கவில்லை என்பதனை உணர்ந்த அவர்கள் வேறு எவ்வித வழியுமின்றி நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதெனத் தீர்மானித்தனர். ஆட்சியாளருக்கு இது சம்பந்தமாக அவர்கள் எச்சரிக்கை விடுத்து 1886-ம் ஆண்டு சித்திரை முடிவிற்குள் உரிமை கிடைக்காவிடில் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதாக அறிவித்தார்கள். அந்நேரத்தில் தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்த பலர் இதனைக் கண்டித்தனர். பலம்படைத்த முதலாளி வர்க்கத்தை எப்படி எதிர்க்க முடியும் என்றும் ஆயுதம்தாங்கிய பட்டாளத்திற்கெதிராக எதுவித ஆயுதபலமுமற்ற தொழிலாளர் எப்படி போராடுவது என்றும் அவர்கள் சிந்தித்தார்கள். முதலாளிவர்க்கம் தொழிலாளர்களுக்கு இன்னல் விளைவித்தால் அதனை ஏற்று நடப்பதுதான ஒத்துழைப்பு என்றும் சிலர் கருதினர்கள். பலவித கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் தன் கையே தனக்குதவி என்பனை உணர்ந்த சிககோ நகரத் தொழிலாளர்கள் மே முதல் திகதி நேரடி நடவடிக்கையைத் தொடக்கி வைத்தார்கள். உடனடியாகப் பலன் கிடைக்கவில்லையாயினும் அவர்கள் விதைத்த விதை எல்லாத் தொழிலாளர்களுக்கும் சுபிட்சத்தைப் பெற்றுதந்தது.

அதேபோலத்தான் நமது தமிழரசுக் கட்சியின் போராட்டமும் தமிழர்களுக்கு விடுதலை பெற்றுத்தரும்.

சிக்காகோ நகரில் தொழிலாளர்கள் ஆரம்பித்த போராட்டம் போலவே இலங்கையில் வாழும் ஒரு இனத்தின் உரிமையைப் பெறுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி 1956-ம் ஆண்டு நேரடி நடவடிக்கையில் இறங்கியது.

1886 மே மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொழிலாளர் போராட்டம் பல வருஷங்களுக்குப் பிறகு வெற்றிபெற்றது போல 1956-ல் நாம் ஆரம்பித்த உரிமைப் போராட்டம் கூடியவிரைவில் வெற்றியைப் பெறும். இதற்கு எவ்வித ஐயமும் வேண்டியதில்லை.

வர்த்தக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஜீவகாருண்யம், பஸ் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. பீதாம்பரம், செனட்டர் ஜி. நல்லையா ஆகியோரும் பேசினர். திரு. ஆ. இராசரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

எழுதுவினைஞர் சங்க உப-செயலாளர் திரு. இராமநாதன் மேதினத் தீர்மானங்களைப் பிரேரித்தார். எழுதுவினைஞர் சங்கம் அரசாங்கத்திற்கு எதிராகத் தொடர்ந்துள்ள வழக்கில் ஏற்படும் செலவுகளுக்காக பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டப்பட்டது. குமாரட்டிச் சந்தியிலிருந்து மாலை 4 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் 6 மணிக்கு நகர மண்டபத்தை வந்தடைந்தது.

# "தமிழரசுக்கட்சி எதையும் சாதிக்கவில்லை!"

## மாஜி எம். பி. திரு. குமாரசாமி கூறுகிறர்

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழரசுக்கட்சியினர் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும், நடவடிக்கைகள் எடுத்தும், தமிழ் பேசும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றுவதில் தோல்வி கண்டுவிட்டார்கள். தமிழரசு கட்சியின் இணக்கமற்ற கொள்கையினல், இலங்கையின் அரசியலிலும், பொருளாதார முன்னேற்றத்திலும், அவசரகால சட்டத்தின் கீழ் அநேக தீங்குகள் விளைவிக்கப்பட்டபோதிலும், அவர்கள் மூடி மறைத்து வருகின்றனர்" என்று ஜனநாயக அடிப்படை முன்னணித் தலைவரும், முன்னைநாள் சாவகச்சேரி எம். பி.யுமான திரு. வே. குமாரசுவாமி பத்திரிகைகளுக்கு வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியினரின் நான்கு கோரிக்கைகளையிட்டு அவர் மேலும் அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமஷ்டிக் கட்சியினர் 1956-ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக அங்கத்துவம் வகித்துவருகிறார்கள். கீழே தரப்பட்ட நான்கு கோரிக்கையின் மூலமே அவர்கள் பதவிக்கு வந்தார்கள்.

(1) சமஷ்டி அரசாங்கம் ஏற்படுத்துதல்.

(2) பரம்பரை பரம்பரையாக தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்றுவதை தடுத்தல்.

(3) நாடற்றவர் எனப்படும் இந்திய வம்சாவளியினரான தமிழருக்கு பிரஜா உரிமை பெறுதல்.

(4) தமிழ் பேசும் மக்களுக்கு மொழி உரிமை பெறுதல்.

தமிழரசுக் கட்சியினரின் கொள்கையினலும் திட்டங்களினலும் தங்களை பாராளுமன்றத்திற்கு தெரிந்தனுப்பிய வாக்காளருக்கு, அளித்த வாக்குறுதிகளில் ஒன்றையாவது நிறைவேற்றினர்களா என்பதை ஆராய்வதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் அவர்களின் கோரிக்கைகளையும், அதனல் அடைந்த பலன்களையும் ஒவ்வொன்றுக ஆராய்வோம்.

(1) சமஷ்டி அரசாங்கம்: இதை அடையும் நோக்கமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஒரு நடவடிக்கையாவது எடுக்கப்படவில்லை. சமஷ்டி என்பது ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் கூட்டாக இருப்பதால், கற்றவர்களும் இதையிட்டு சிந்திக்கவேண்டும். சமஷ்டிக் கட்சியினரின் கொள்கையினல், இரு இனங்களிடையேயும் வெறுப்புணர்ச்சி உண்டாகியதே ஒழிய, நல்லெண்ணத்தை வளர்க்கவில்லை. அதோடு சிங்கள மக்கள் சமஷ்டி அரசியல் கோரிக்கையை ஒப்புக்கொள்ளககூடிய அளவு பயனளிக்கவில்லை. சூழ்நிலையை சாதகமாக வைத்துககொண்டு நடத்துவதுதான் அரசியல். இதுவே ஒரு அரசியல் வாதியினை வெற்றிகளை அளக்கக்கூடிய அளவுகோலாகும். சமஷ்டி அரசாங்கத்தை ஏற்படுத்துவதில் எந்த அளவில் தமிழரசுக் கட்சியினர் முன்னேறியிருக்கிறார்கள்? இந்தப் பாதையில் அவர்களின் முன்னேற்றம் மிகவும் கீழே இருப்பதோடு, சிங்கள மக்கள் தமிழர்கள்மீது மேலும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டிய நிலையையும் ஏற்படுத்திவிட்டது.

(2) பரம்பரைபரம்பரையாக தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்றுவதை தடுத்தல்: தமிழரசுக் கட்சியினர் தங்களது கொள்கையினல், தமிழர்கள் பரம்பரைபரம்பரையாக வாழ்ந்துவரும் பகுதிகளில் சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்த முடிந்ததா? இந்தப் பாதையில் சமஷ்டிக் கட்சியினர் தோல்வி அடைந்ததோடு, வடமாகாணத்திலுள்ள நிலமில்லாதவர்களை குடியேற்றுவதிலும் தோல்வியடைந்துவிட்டார்கள். கிழக்கு மாகாணம், தமிழ் மாகாணமாக இருந்தும், முஸ்லிம் பகுதியாக மாறிவிட்டதோடு, மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய பாகிஸ்தான் உதயமாவதோடு, கூடிய சீக்கிரம் இலங்கையின் தென்கரையோரப்பகுதி புத்தளத்தையும், மன்னரையும் உள்ளடங்கிய இன்னுமொரு பாகிஸ்தான் ஏற்படப் போகிறது. தமிழரசுக்கட்சியினர், தமிழ் பகுதியில் குடியேற்றம் நடைபெறுவதை தடுக்காமல், அரசியல் சுலோகங்களை எழுப்புவதில் மட்டும் அக்கறை காட்டி வருகிறார்கள். ஆதலால் கடந்த 7 வருடகாலமாக குடியேற்ற விஷயத்தில் அவர்களது கொள்கை படுதோல்வியடைந்து விட்டது.

(3) இலங்கை - இந்திய தமிழர்களுக்குப் பிரஜா உரிமை: தமிழரசுக்கட்சியினர் இலங்கை-இந்தியர் பிரச்சினை சம்பந்தமாக சிங்கள அரசியல்வாதிகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் நடந்து கொள்ளவில்லை. இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டிய பிரச்சினைதான் இது. திரு. தொண்டமான், திரு. அஸீஸ் ஆகியவர்களின் தலைமையிலுள்ள இந்தியத் தமிழர்களின் இரு பெரிய அரசியல் ஸ்தாபனங்களும் மலைநாட்டில் தமிழரசுக்கட்சியினர் புதிய அரசியல்மேடை அமைத்ததையிட்டுப் பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். இந்த விஷயத்திலும் சமஷ்டிக்கட்சியினர் தோல்வி கண்டுவிட்டனர்.

தமிழரசுக் கட்சியினர் ஆகக் குறைந்து பெறக்கூடியது பிரதேசசபைகள் தான். அவர்கள் அரசியலில் குழந்தைகளாகவும் அனுபவம் இல்லாதவர்களாகவும் இருப்பதால் அதையும் பெறுவதில் தோல்வி கண்டுவிட்டார்கள்.

(4) தமிழர்களின் மொழி உரிமை: தமிழர்களின் மொழி உரிமை பிரச்சினையில், தமிழரசுக்கட்சியினர் தங்களின் கொள்கையினல் நிலைமையை மிகவும் மோசமாக்கிவிட்டார்கள். அரசாங்க ஊழியர்களை சிங்களம் படிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஆனல் தமிழ் அரசாங்க ஊழியர்களில் 75 சதவீதமானோர் சிங்களப் பரீட்சை சித்தியடைந்துள்ளனர். இதனல் தமிழரசுக் கட்சியினர் பிரச்சினைகளைத் தீர்ப்பதை தாங்கள் விரும்பவில்லை என்பதனையும் மறைமுகமாக, தமிழரசுக்கட்சியினர் தலைமைதாங்குவதை எதிர்க்கிறோம் என்பதனையும், தமிழ் மக்களில் திடமானவர்களும் சிந்திக்கக் கூடியவர்களுமாகிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் எடுத்துக் காட்டிவிட்டார்கள்.

தமிழரசுக் கட்சியினர் தங்களது கோரிக்கைகள் எல்லாவற்றிலும் தோல்வி கண்டுவிட்டார்கள். இனிமேலும் இக்கோரிக்கைகளில் ஒன்றையாவது பெறுவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வராது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், ஜனநாயக முறைகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு பாராளுமன்ற அரசியல் அமைப்பை கொஞ்சம் கொஞ்சமாக ஏப்பம் விட்டுவிடுகிறார்கள்.

தற்பொழுது மந்திரிமார்களின் சர்வாதிகாரமான போக்கு தலைதூக்கியுள்ளது. பொலிஸார் செய்யக் கூடிய சாதாரண வேலைகளுக்கும் உடனடியாக இராணுவத்தினர் அழைக்கப்படுகின்றனர். இதனல் இராணுவத்தினருக்கு தவறான எண்ணங்கள் ஏற்படுவதோடு பாகிஸ்தான், பர்மா, போன்ற நாடுகளுக்கு ஏற்பட்ட நிலையைக் கொண்டுவர இராணுவத்தினர் தயங்கமாட்டார்கள். இதன் காரணமாக ஜனநாகததிற்கு சவக்குழி தோண்ட வழிபிறக்கும்.

சிங்கள-தமிழ் வகுப்புவாதிகளான பயனற்ற இயக்கங்களின் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்பட்ட குறையை, நிறைவாக்க, பொது மக்கள்மீது அரசாங்கம் அதிக வரிச்சுமையை ஏற்படுத்தியுள்ளது இதன் பலாபலனுக நாட்டிலே மக்கள் மத்தியில் அமைதியின்மையும் வேலையில்லாத் திண்டாட்டமும் வகுப்புவாதமும் தாண்டவமாடுகிறது.


பதவியாசையுடைய கம்யூனிஸ்ட்கட்சிக்கு ஆட்சியை கைபற்றுவதற்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்றதாக இருந்து வருகின்றன.

இவையெல்லாம் தமிழரசுக் கட்சியினரின் கொள்கையினலும் திட்டங்களினலும் ஏற்பட்ட பலன்களே.

நடைமுறைக்கு ஏற்ற அரசியலை தமிழரசுக்கட்சியினர் பின்பற்றுகிறர்களா என்றும், திரும்பவும் தமிழ்ப்பேசும் மக்கள் சிந்திகக வேண்டிய நல்ல சந்தர்ப்பம் இதுவே.

தற்பொழுதுள்ள அரசியல் நிலைமையையிட்டு சிந்திக்க வேண்டியதும சிங்களமக்களுடன் நல்லெண்ணம் ஏற்படும் விதமாக உடன்பாட்டுக்கு வர வேண்டியதும் தமிழ்ப்பேசும் மக்களைப் பொறுத்ததே.

# மங்கையர் ★ உலகம்



## தாய்ப்பாலும் குழந்தை நோயும்

ரீசஸ் குரங்குகளின் இரத்தத்திலும் ஒருசில மனிதர்களின் இரத்தத்திலும் 'ஆர்.எச்.' எனப்படும் ஒருவகைச் சத்து காணப்படுகிறது. மனிதர்களில் பெரும்பாலோரின் இரத்தத்தில் ஆர். எச். நேர்நிலைச் சத்து இருக்கிறது. இவை இரத்தத்தின் சிவப்பு அணுக்களில் உள்ளவை. தாயின் சிவப்பு அணுக்களில் ஆர். எச். எதிர்மறைச்சத்து இருந்து, குழந்தைக்கு ஆர். எச். நேர்நிலைச்சத்து இருக்குமானல், அத்தாயின் பாலையுண்ணும் குழந்தையின் சிவப்பு அணுக்கள் சிதைந்து போய்விடும். அதனல் குழந்தைக்கு மஞ்சள் காமாலை உண்டாகும். பிறந்த ஒருமாதத்துக்குள் இறந்துவிடும். இம்மாதிரி நேர் மாருன நிலை ஏற்படும் குழந்தைகளுக்கு இரத்தம் செலுத்திக் குணப்படுத்திவிடலாம்.

தாய்ப்பாலிலுள்ள ஆர். எச். எதிர்மறையை ஏற்றுக்கொண்ட காரணத்தினல்தான் சில குழந்தைகளுக்குத் தீராத இரத்தச்சோகை உண்டாவதாகக் கடந்த பதினைந்து ஆண்டுளாக மருத்துவ நிபுணர்கள் கருதிவருகிருர்கள். இதுபற்றிப் பல்வேறு விதமான வாதப் பிரதிவாதங்கள் இருந்து வருகின்றன. ஆனல் பிள்ளைப் பேற்றுக்குப் பிறகு மூன்று வாரங்கள் கழித்துத் தாயின் இரத்தத்திலுள்ள ஆர். எச். எதிர்மறையின் வீரியம் குறைந்துவிடுவதாகவும், அதனல் அந்தக் காலத்திற்குப்பின் தாய்ப்பால் உண்ணும் குழந்தைகளின் சிவப்பு அணுக்கள் சிதைந்து நோய்கள் உண்டாவதில்லை என்றும் கனடாவைச் சேர்ந்த டாக்டர் ஜே. எம். போமென் கூறியுள்ளார்.

இரத்தத்தில் இக்குறைபாடுகள் உள்ள தாய்மார்களைக் கொண்டு குழந்தைகளுக்குப் பாலூட்டுமாறு வின்னிபெக்கில் செய்துபார்த்த சோதனையில், குழந்தைகளுக்கு எவ்விதமான பாதகமும் ஏற்படவில்லையென்று அவர் கூறினர். எனவே தாய்மார்கள் விரும்பினல் பேறுகாலத்துக்கு மூன்று வாரங்கள் கழித்துப் பாலூட்டுவதைத் தடுக்கவேண்டியதில்லையென்று அவர் கூறுகிருர்.

## சமையல் கற்கும் பிரிட்டிஷ் பெண்கள்

பிரிட்டன், மே 2

பிரிட்டனில் லூடன் பகுதியில் வசிக்கும் பிரிட்டிஷ் பெண்கள், இந்தியா பாகிஸ்தான் மற்றும் கீழை நாடுகளைச் சேர்ந்த சமையல் முறைகளைக் கற்று வருகின்றனர். இந்த நாடுகளைச் சேர்ந்த தின்பண்டங்கள், உணவு வகைகள், சிற்றுண்டிகள் ஆகியவற்றை எப்படிச் செய்வதுஎன்பதை லூடன் கல்லூரியில், இப்பெண்களுக்கு திருமதி ஜெனிபர் டுருஸ்டன் வெஸ்ட் கற்றுத் தருகிருர். இவர் சமீபத்தில் ஆசிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து இந்த உணவுவகைகளில் சமையல் முறையை கற்றறிந்தவர்.

"பெரும்பாலான வீடுகளில் பெண்கள் தாங்கள் நீண்டகாலமாக செய்து வரும் பிரிட்டிஷ் சமையல் முறையைத் தவிர வேறு எந்த சமையலையும் ஒரு மாறுதலுக்காகக்கூட செய்துபார்க்கமாட்டார்கள். ஆயினும் கீழை நாடுகளின் சமையல் முறை மனதைக் கவரக்கூடிய பல வித ரகங்களைக் கொண்டதாக உள்ளது" என்று டுருஸ்டன்வெஸ்ட்கூறினர்.

# பெண் தொழிலாளர்களுக்கு தொழிற் சாசனம்

பிரிட்டனின் தொழிற்சங்கக் காங்கிரசின் மத்திய கவுன்சில் தனது தொழிற்சங்க இயக்கக் கொள்கைகளை வகுத்துக்கொள்வதற்காக, மேற்படி சங்கத்தின் பெண்கள் ஆலோசனைக் குழு ஆறு அம்சங்களடங்கிய சாசனம் ஒன்றைத் தயாரித்து அளித்திருக்கிறது.

வேலைக்கு ஏற்ற கூலி, உத்தியோக உயர்வுக்கான வாய்ப்புகள், தொழில்களில் பெண்களுக்கு அப்ரண்டிஸ் பயிற்சிக்கான திட்டங்கள், இளம் பெண்களுக்கு இன்னும் அதிகப்படியான தொழிற் பயிற்சித் திட்டங்கள், தொழில் செய்வதற்காகவரும் முதிய பெண்களுக்கான நல, சுகாதார வசதிகள் ஆகியன பெண் தொழிலாளர்களுக்கு வேண்டுமென்று ஆலோசனைக் குழு சாசனத்தில் கேட்டுள்ளது.

பிரிட்டனிலுள்ள 2 கோடியே 40 இலட்சம் தொழிலாளர்களில் 80 இலட்சம் பேர் பெண்கள். பெண்கள் பெரும்பாலான தொழில்களில் ஆண்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தில் அரை வாசிக்கும் சற்று அதிகமான ஊதியமே பெறுகிருர்கள். கடந்த சில ஆண்டுகளில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான இந்தச் சம்பள வித்தியாசம் விரிவடைந்துகொண்டே வந்துள்ளது என்றும் ஆலோசனைக் குழு கூறுகிறது.

பெண்கள் தொழில் பேரம் செய்யமுடியாமல் இருப்பதற்குக் காரணம் இவர்களில் 20 இலட்சம் பேர் மட்டுமே தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவர்களிலும் நான்கில் ஒருவர் தொழிற் சங்கக் காங்கிரசுடன் இணையாத இதர தொழிற்சங்கங்களில் உறுப்பினராக உள்ளனர்.

பெண்களின் உடல்நலம் குறித்துத் தனியான விசேஷ விதிகளை இச்சாசனம் கோருகிறது.

## கனடாவில் விவாகரத்து அதிகரிப்பு

ஒட்டாவா, கனடாவில் கடந்த ஆண்டில் விவாகரத்துக்கள் சிறிதளவு அதிகரித்துள்ளன. புள்ளி விவரங்களுக்கான டொமினியன் பீரோ இத்தகவலை வெளியிட்டுள்ளது.

1961-ல் 6563 விவாகரத்துக்கள் வழங்கப்பட்டன. இந்த எண்ணிக்கை 1962-ல் 6709ஆக அதிகரித்துள்ளது.

1961-ல் விவாகரத்துக்களின் விகிதமானது ஒரு லட்சம் பேருக்கு 36 ஆக இருந்தது. போன ஆண்டில் இந்த விகிதம் 36.1 ஆக) அதிகரித்துள்ளது. கனடாவில் 1947-ல் தான் விவாகரத்து விகிதம் மிக அதிகமான வகையில் 65.4 ஆக இருந்தது.

## குழந்தைகளுக்குப் பாலுணவு

இதுவரை குழந்தைகளுக்கான பாலுணவை இந்தியா இறக்குமதி செய்துவந்தது. தற்போது இத்தேவை முழுவதும் உள்நாட்டுத் தயாரிப்புகள்மூலமே நிறைவு செய்யப்பட்டுவிட்டது. 1962-ல் குழந்தைகளுக்கான பாலுணவு 3500 மெட்ரிக்டன் இந்தியாவில் செய்யப்பட்டது. இது முந்திய ஆண்டின் உற்பத்தியைவிட இரண்டுமடங்கு அதிகமாகும்.

## குளிர்பதனம் செய்த காய்கறிகள்

பிரிட்டிஷ் மக்கள் குளிர் பதனம் செய்யப்பட்ட காய்கறிகளைக் கூடுதலான அளவில் தற்போது சாப்பிட்டுவருகிருர்கள் என்று, விவசாய அமைச்சரகப் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது.

## மகாராஷ்டிர ராஜ்யதினம்

பம்பாய், மே 1

மாராஷ்டிர ராஜ்யம் உதயமான மூன்ருவது ஆண்டு விழா இன்று மகாராஷ்டிரத்தில் கொண்டாடப்படுகிறது. மகாராஷ்டிர கவர்னர் திருமதி விஜயலட்சுமிபண்டிட் இன்று காலை வடபம்பாயில் தொண்டர்படை, பொலிஸ படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்ருர். இரவு சௌபாத்தி மைதானத்திலும் சிவாஜி பூங்காவிலும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## வெசாக் விழா

புங்குடுதீவு, வியாழன்

சப்ததீவு இந்து மகா சபாவினர் இவ்வருடம் வெசாக் விழாவிற்குச் செல்லும் யாத்திரீகர்களுக்கு குடிதண்ணீர் வசதி போக்குவரவு முதலிய சகல வசதிகளையும் செய்ய முன்வந்துள்ளார்கள். இவ்வருடம் பெருந்தொகையான யாத்திரிகள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஜனதிபதி பதவியை எதிர்நோக்கும் பெண்!

நாட்டின் நலனுக்கு ஆண்களுடன் பெண்களை தோளோடு தோள் நின்று ஒற்றுமையாக உழைக்க வேண்டும் என்பது பல அறிஞர்களின் கருத்து. ஆனல் சில நாடுகளில் ஆண்களுடன் சரிநிகராக நின்று, நாடு நலம்பெற பாடுபடுவதற்கான உரிமையைப் பெண்கள் இழந்துள்ளனர். சுழலும் உலகிலே சில நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. ஆனல் சில நாடுகளில் பெண்கள் பெரும் பதவிகளைக் கூட வகிக்கின்றனர். உலகிலேயே ஒருபெண் பிரதமர் இருப்பது எமது நாட்டில்தான் என்ருல் அது நமக்கும் பெருமைதான்.

இந்த வரிசையில் லெபனன் பார்லிமெண்டில் முதன்முறையாகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திருமதி மிர்னபஸ்தானி எல்கஜன் இம்முறை இடம்பெறுகிருர். ஜனதிபதியாகும் வாய்ப்புக் கிடைத்திருக்கும் இவரது பணியை இக்கட்டுரை விளக்குகிறது.

கடந்த பல ஆண்டுகளாகவே லெபனனில் பெண்களுக்கு வாக்குரிமை இருந்துவந்தாலும் இதுவரையிலும் எந்தப் பெண்ணும் பாராளுமன்றத்திற்கு உறுப்பினராகச் சென்றதில்லை. முதன்முறையாக லெபனன் பாராளுமன்றத்திக்குத் திருமதி மிர்னபஸ்தானி எல்கஜன் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அண்மையில் விமான விபத்தில் காலமான அவருடைய தந்தையின் மரணத்தின்பின் காலியான இடத்துக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருமதி எல்கஜன் அவருடைய தந்தைகு ஒரே மகள்.

லெபனனில் "பஸ்தானி இனத்"தார் சுமார் 2000 பேர் உள்ளனர். இக்குடும்பத்தார் மிகுந்த குடும்பப் பெருமை கொண்டவர்கள். எமில்பஸ்தானி, மகளைத் தவிர ஆண்சந்ததி இல்லாது இறந்ததால், பாராளுமன்றத்தில் அவர் 12 ஆண்டுகளாக இடைவிடாது ஆற்றிவந்த பணி தொடர்ந்து நடைபெறுவதற்காக பஸ்தானி குடும்பத்தார் அவருடைய மகளைப் பாராளுமன்ற உறுப்பினராக ஆக்கியுள்ளனர்.

திருமதி எல்கஜன் அழகும் மதிக்கூர்மையும் கொண்ட இளமங்கை. தன் தந்தையின் நினைவாக இனத்தாரின் விருப்பத்தை நிறைவேற்றத்தான் அவர் இப்பதவியை ஏற்க ஒப்பினர் என்று கருதிவிட முடியாது. அவருடைய தந்தை இரண்டு திட்டங்களை மிகவிரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று தீவிரமாகப் பாடுபட்டுவந்ததைத் தான் முடிக்க வேண்டுமென்ற கருத்துடன் புதுப்பணியை அவர் மேற்கொண்டுள்ளார்.

தன் தந்தையின் பெயரால் தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் அளிப்பதும் அவர் வாழ்நாள் முழுவதும் மேற்கொண்டிருந்த தர்மகாரியங்களில் தானும் ஈடுபட வேண்டுமென்று திருமதி எல்கஜன் ஆர்வமாக இருக்கிருர்.

1937-ல் பேருட்டில் பிறந்த இவர் பிரஞ்சுப் பல்கலைக்கழகத்தில் இலக்கியத்துக்கான பட்டம் பெற்றவர். இவருக்கு அரபு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் தங்கு தடையின்றிப் பேசவும் எழுதவும் தெரியும். பியானே வாசிப்பதிலும் இவர் கெட்டிக்காரர்.

லெபனனின் வரலாற்றுப் பெருமை கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த ஷெயிக்ஃபௌது எல்கஜன் என்பவருக்கும் இவருக்கும் 1958 டிசம்பரில் திருமணம் நடந்தது. இவர்களுக்கு இப்போது ஜமில் என்னும் 4 வயதுப் பையனும், லாரா என்னும் 2 வயதுப் பெண்ணும் இருக்கிருர்கள். ஷெயிக்ஃபௌது ஒரு எஞ்சினியர். எழுதா மரபாக இருந்து வரும் லெபனன் அரசியல் சட்டப்படி திருமதி எல்கஜன் பிரதமமந்திரியாக வருவதற்கு வாய்ப்பு இல்லை. ஏனெனில் அவர் ஒரு முஸ்லிமல்ல. ஆனல் அவர் மரோனைட்டுக் கிறிஸ்தவராக இருப்பதால் ஜனதிபதியாக வருவதற்குச் சட்டப்படி அவருக்கு வாய்ப்பு இருக்கிறது.

## கத்தோலிக்கர் மே தினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கத்தோலிக்க தொழிலாளர் சங்க ஆதரவில் கத்தோலிக்க மக்கள் மே தின விழாவைக் கொண்டாடினர்.

கத்தோலிக்கதிருச்சபையின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் திருச் சுருபம் கொழும்புத்துறை சூசையப்பர் தேவாலயத்திலிருந்து ஊர்வலமாக யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகளில் சென்று மாலையில் யாழ்ப்பாணம் கௌமேஷன் கடற்கரை மைதானத்தில் நவீன முறையில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்டது. யாழ்ப்பாண மேற்றிராசன ஆண்டவர் எமிலியானுஸ்பிள்ளை ஆசிர்வதித்தார்.

மேற்றிராசன ஆலயத்தில் காலையில் பாடற் பூசை நடத்தப்பட்டது. தொழிலாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட விருந்தில் ஏராளமான தொடலாளர்கள் கலந்து கொண்டினர்.

## "சமாதானமே சர்வோதய குறிக்கோள்"

கல்கத்தா, மே 1

"சர்வோதயக் கருத்துக்கள் நாட்டின் ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வளர்க்கக் கூடியன" என்று ஆச்சார்ய வினேபாபாவே மேற்கு வங்காளத்தில் ஒரு கிராமத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் கூறினர்.

உலகில் சமாதானம் தழைக்க வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டது சர்வோதய இயக்கம் என்று வினேபாஜி கூறினர்.

## இந்திய ராணுவத்தில் சேர்ந்தார்!

### இரு சீனரின் தந்திரம்

புதுடில்லி, மே 1

சீன வம்சாவழியினரான இரு சகோதரர்கள் பொய்ப் பெயர்களைக் கொடுத்து சமீபத்தில் பாரத ராணுவத்திலும், அஸ்ஸாம் துப்பாக்கிப் படையிலும் சேர்ந்துவிட்டதாக உதவித் தற்காப்பு மந்திரி திரு டி. ஆர். சாவன் லோகசபையில் தெரிவித்துள்ளார்.

இது விஷயம் கண்டுபிடிக்கப்பட்டவுடனேயே, அவர்கள் புலன்விசாரணைக்காகவும், மேல் நடவடிக்கைககாகவும், சிவில் பொலிசிடம் ஒப்படைக்கப்பட்டனரென திரு. சாவன் தெரிவித்தார்.

இதற்குப் பிறகு இத்தகைய ஏமாற்று வேலைகளைத் தடுப்பதற்குத் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு மந்திரி அறிவித்தார்.

# வானொலி நிகழ்ச்சிகள்

## வெள்ளி 3-5-63

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**காலை**

6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 ஏ. வேல்சாமி — தோத்திரப் பாடல்கள், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதம்.

**பகல்**

12-00 சித்திரகானம், 1-00 கதப இசை.

**மாலை**

5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

**இரவு**

7-00 ஞானாஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 நாடகம், 8-45 இஸ்லாமியகீதம், [9-15 விமர்சனம், 9-30 கதாப்பிரசங்கம், 10-15 இசையமுதம்.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

**காலை**

6-45 மங்கள இசை, 6-55 ஸ்வாதித் திருநாள் மகாராஜாவின் நவராத்திரி, 7-00 அருள் வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 நாகஸ்வரம்.

**பகல்**

12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 இசைக்கோவை.

**மாலை**

5-00 நாகஸ்வரம், 5-45 காந்தி அஞ்சல், 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

**இரவு**

7-30 பொங்கியெழும் பாரதம்—சித்திரம், 7-45 பாட்டு, 9-15 பலகணி, 9-30 மெல்லிசை, 9-45 ஸ்வாதித்திருநாள்—சித்திரம்.

---

## நெல்லியடிக்கு வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய்

நெல்லியடி சனசமூக நிலைய விளையாட்டு வீரர்களுக்கும் வதிரி விளையாட்டுக் கழகத்தினருக்கும் இடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் இரு ஆட்டங்களால் நெல்லியடி வெற்றியீட்டியது.

நெல்லியடி, வதிரி பொம்பஸ் விளையாட்டுக் கழகத்தினருடன் விளையாடியும் இரு ஆட்டங்களாலும் வெற்றி அடைந்தார்கள்.

மத்தியஸ்தர்களாகத் திருவாளர்கள் கே. தெய்வேந்திரன், குலராசா ஆகியோர் கடமையாற்றினர்கள்.

---

## ஆலோசனை விழா

யாழ்ப்பாணம், வியாழன்

ஸ்ரீ லங்கா சைவாதீனத்தினதும், வேதாகம சைவசித்தாந்த சபையினதும் கூட்டு ஆலோசனை விழா அராலி கிழக்கு முத்துமாரி அம்மன் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும. விழாவுக்கு வேதாகம பூஷணம் பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் தலைமை வகிப்பார்.

## இளைஞர் கழகம் வெற்றி

கோண்டாவில், வியாழன்

கோண்டாவில் கிழக்கு இளைஞர் கழகக் கோஷ்டிக்கும் சாவகச்சேரிக் கோஷ்டிக்கும் இடையே நடந்த கிரிக்கெட் போட்டியில் இளைஞர் கழகம் சாவகச்சேரிக் கோஷ்டியை இனிங்சால் தோற்கடித்தது.

இளைஞர் கழகம் முதலாவது இன்னிங்ஸில் 154 ஓட்டங்களை 9 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கும், சாவகச்சேரி கோஷ்டி இரு இன்னிங்ஸ்களிலும் முறையே 65, 75 ஓட்டங்களையும் எடுத்தது.

---

## தவறு

29-4-63 'ஈழநாடு' பத்திரிகையில் உடுவில் பாடசாலையொன்றில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. த. துரைசிங்கம் சம்பந்தமாக வெளிவந்த செய்தி தவறுஎன அறிவிக்கப்படுகிறது. இத் தவறுக்காக வருந்துகிறோம்.

---

## கணவனை கொலை செய்தவருக்கு

### ஆயுள்தண்டனை

பாகல்பூர், மே 1

தனது கணவனை கொலை செய்த குற்றத்துக்காக மாயாதேவிக்கும், மற்றும் இருவருக்கும் பாகல்பூர் இரண்டாவது கூட்டுமாவட்ட நீதிபதி ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

மாயாதேவி காகல்பூர் தொகுதி காங்கிரஸ சட்டசபை அங்கத்தவர். இராம்கிறிட் சௌத்ரி, கும்போ ஆகியோர் தான் ஆயுள் தண்டனை பெற்ற மற்றும் இருவர்களாவார்கள்.

1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் திகதி பாகல்பூர் பகுதியிலுள்ள கிராமத்தில் தமது கணவனை பகிராத் சவுத்திரி என்பவரை கொலை செய்ததாக மாயாதேவி மீதும் மற்றும் நால்வர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

காலஞ்சென்ற பகிராத் சவுத்திரியின் உடம்பில் 15 வெட்டுக்காயங்கள் இருந்ததாக பிரேத பரிசோதனையின் போது தெரியவந்தது.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சாகிர்குன்ஜர், சிவாசரன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

---

## பாடசாலையில் தீ!

காங்கேசன் துறை, புதன்

காங்கேசன் துறை அமெரிக்க மிஷன் பாடசாலைக் கட்டடத்தின் ஓர் பகுதி நேற்றுக்காலை திடீரெனத் தீக்கிரையானது. அருகிலுள்ள வேலைத் தலத்திலிருந்த தொழிலாளர்களும் அயலவர்களும் தீயைப்பரவவிடாது அணைத்து விட்டனர். பாடசாலைக்கு முன்னால் உள்ள புகையிரத நிலையத்திலிருந்து நெருப்புப்பொறி பறந்ததனல் இச்சம்பவம் நடந்திருக்கக் கூடுமென ஊகிக்கப்படுகிறது.

---

## வெளிச்சமில்லை

கோண்டாவில், வியாழன்

கடந்த ஒருமாத காலமாக கொக்குவில், கோண்டாவில் ஆகிய இரு இடங்களிலும் உள்ள வீதிகளில் இருக்கும் மின்சார விளக்குகள் எரியாமல் இருப்பதினல் வீதிகள் அனைத்தும் இருளில் மூழ்கி விட்டன.

---

## பதவி உயர்வு

உடுப்பிட்டி, வியாழன்

கடந்த இரண்டரை ஆண்டுகளாக கரவெட்டி தபாற்கந்தோரில் முதல்வராகக் கடமையாற்றிய திரு. எம். நடராசா 'இ.கு. வெஸ்ரிக்கேற்றிங் இன்ஸ்பெக்டராக' உத்தியோக உயர்வு பெற்று கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## காயப்படுத்திய வழக்கில் அபராதம்

மாவிட்டபுரம், புதன்

பருத்தித்துறை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த துன்னாலை வாசியான கதிரேசு நல்லதம்பி மீது எறி குண்டு போன்ற வஸ்து ஒன்றினை வீசிக்காயமேற்படுத்தியதாக அதே ஊரைச்சேர்ந்த வல்லி வேலன், வல்லி பொன்னன், வல்லி கிட்டினன், சின்னம்தம்பி நடேசு ஆகிய நால்வர் மீதும் பருத்தித்துறை நீதிபதி திரு. வைத்திலிங்கம் முன்னிலையில் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித்தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு 1, 3, 4-ம் எதிரிகளுக்கு தலா 50 ரூபா அபராதமும் 2-ம் எதிரிக்கு 100 அபராதமும் விதித்து நாலு எதிரிகளையும் ஆறுமாதத்திற்கு 100 ரூபா கன்னடைத்தைப் பிணையில் செல்லும் படி உத்தரவிட்டார்.

---

## தேங்காய் அடி போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

கைதடி, அண்ணமார் கோவிலில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை தேங்காய் அடி விளையாட்டுப் போட்டி நடைபெறும்.

## இந்த வருடத்தில்! 210 கொலைகள்

கொழும்பு, புதன்

இந்த வருடத்தில் இதுவரை 210 கொலைகள் இடம் பெற்றுள்ளன. 133 மரண விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன.

சென்ற வருடத்தில் இந்தக் கால எல்லையுள் (ஏப்ரல் வரை) 200 கொலைகள் இடம் பெற்றன. ஆனல் மரண விபத்து சம்பவங்கள் 137 ஆக இருக்கின்றது.

சென்ற மாதத்தில் மட்டும் 59 கொலைகளும் 38 மரண விபத்துக்களும் இடம் பெற்றன.

---

## போஸ்ட் மாஸ்டர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, புதன்

ஹட்டன் மாவட்டத்திலுள்ள போஸ்ட்மாஸ்டர்கள், நாளை வியாழக்கிழமை நள்ளிரவு முதல் வேலை நிறுத்தம் செய்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. 1952-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஹட்டன் போஸ்ட்மாஸ்டர்களின் விடுதிகள் திருப்பிக் கொடுக்கப்படவில்லையென்ற காரணத்தினல் இப்போஸ்ட்மாஸ்டர்கள் வேலை நிறுத்தம் செய்கிருர்கள்.

## நீர்ப்பாசனத் திட்டம் கைவிடப்பட்டதா?

வென்னப்புவ, புதன்

மூன்று வருடங்களுக்கு முன்னர் உத்தேசிக்கப்பட்ட யக்கபெண்டி எல நீர்ப்பாசனத் திட்டம் இப்பொழுது கைவிடப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. 250 லட்சம் ரூபா செலவில் இத்திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்தபோதிலும் அது கவனிக்கப்படாமல் இருக்கின்றது. இதனல் இத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டதோ என மக்கள் சந்தேகிக்கின்றனர். அரசாங்கத்திடம் போதிய நிதி இல்லாததே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது இத்திட்டம் பெரும் கொண்டாட்டங்களுடனும் பிரபல்யத்துடனும் ஆரம்பிக்கப்பட்டது.

---

## பியர்ஸன் லண்டன் சென்ருர்

ஒட்டாவா, மே 1

கனடா பிரதம மந்திரி திரு. லெஸ்டர் பியர்ஸன், பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லனுடன் பேச்சுநடத்துமுகமாக இன்று லண்டன் புறப்பட்டுச் சென்றுள்ளார்.




**ஒஸ்டர்மில்க் குழந்தைகள் அழகாகவும் ஆரோக்கியமாகவும் திகழ்கிறார்கள்**

தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்ப முடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இரும்புச் சத்தும், விட்டமின் டி யும் கொண்ட சுத்தமான பால் ஆகாரம்.

குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வதைக் கண்டு ஆனந்தமடையுங்கள்

**ஒஸ்டர்மில்க்**




ஒஸ்டர்மில்க் குழந்தை புத்தகம் இலவசமாய் கொடுக்கப்படும். தபாற் செலவுக்காக 10 சத முத்திரை ஒன்றைக் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

கிளக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.

கொழும்பில்

# சரித்திரம் காணாத மேதின ஊர்வலம்

## காலிபேஸ் மைதானம் எங்கும் ஜன சமுத்திரம்!

கொழும்பு, வியாழன்

கடந்த 40 வருட காலத்தில் இலங்கையின் சரித்திரத்திலேயே இல்லாத அளவில் மிகப்பிரமாண்டமான மேதின ஊர்வலம் நேற்றுக்கொழும்பில் நடைபெற்றது. லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய இடதுசாரிக்கட்சிகளின் சார்பாக நடைபெற்ற இம் மேதினக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்பொருட்டு 4 மைல் நீளமான ஊர்வலம், நகரின் பலபகுதிகளிலிருந்தும் புறப்பட்டு காலிபேஸ மைதானத்தை அடைந்தது.

எவரும் எதிர்பாராத அளவில் ஜனசமுத்திரம் காலிபேஸ மைதானத்தை நிறைத்துவிட்டிருந்தது 40 முதல் 50 ஆயிரம் மக்கள் நிறைந்த இக்கூட்டத்திற்கு லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, கம்யூனிஸட்கட்சித் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்கா, மக்கள் ஐக்கிய முன்னணிக்கட்சித்தலைவர் திரு. பிலிப்குணவர்த்தன ஆகியோர் அலங்கரிக்கப்பட்ட மோட்டார் ரதத்தில் ஒன்ருகப் பவனி வந்து வழிநெடுக மக்களின் மரியாதையை ஏற்றுக்கொண்டனர்

# "ஐக்கிய இலங்கையே இனப்பிரச்னை தீரவழி"

## முற்றவெளியில் இடதுசாரிகளின் மேதினக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

**'இலங்கை அரசியல் சரித்திரத்தின் புதிய திருப்பமாக, இடதுசாரி ஐக்கிய முன்னணி இன்று நடத்திய மேதினக் கொண்டாட்டத்தில், இடதுசாரித் தலைவர்கள் பலர் ஐக்கிய இலங்கையின் கீழ்தான் தமிழ் பேசும் மக்கள் சுமுகமாகத் தங்களது இனப் பிரச்னையையும் மொழிப் பிரச்னையையும் தீர்த்துக்கொள்ள முடியும்' என்று கூறினர்கள்.**

கொழும்பு மாநகரசபை அங்கத்தவர் திரு இரத்னவீரா பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "பொருளாதார பிரச்னையை அடிப்படையாகக் கொண்டே மொழி, இனப்பிரச்னைகள் தோன்றியுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சிறுபான்மையினரது பல பிரச்னைகளையும் மற்றும் மொழிப் பிரச்னையையும் ஒரு வழியிலும் தீர்க்க முடியவில்லை. இலங்கையின் மொழி பிரச்னை அதிகார வேட்கையிலேயே உருவானது. இந்த மொழி, இனப் பிரச்னைகளை முன்வைத்தே, சமஷ்டிக் கட்சியும் இங்கே வாக்குகளைப் பெறக் கூடியதாக வந்தது. முதலாளித்துவ அடிப்படையிலே அமைந்த சுதந்திரக் கட்சியும், சமஷ்டிக் கட்சியும் இன வெறிசனைக் கிளப்பியே அதிக ஆதரவைப் பெற்றனர். எவ்வழியில் சென்றாலும் இவ்விரு கட்சிகளாலும் பொருளாதாரப் பிரச்னைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் இப்பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. இவர்கள் மொழிப் பிரச்னையைக் கைவிட ஆரம்பித்தாலும், இவர்களுடைய 'ஏவல் பேய்கள்' இவர்களுடைய கழுத்தையே நெருக்குமேயொழிய பிரச்னைகளைத் தீர்க்க அந்த 'ஏவல் பேய்கள்' விட்டுபோவதில்லை.

காலம் சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா மொழிப் பிரச்னையைத் தீர்க்க ஆவல் கொண்டிருந்தும் ஒன்றும் தீர்க்க முடியாது இவர்களுடைய 'ஏவல் பேய்'களுக்கே அவர் இரையாகவேண்டிவந்தது.

லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவரும் சென்ற தேர்தலில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட்டவருமான திரு. வி. காராளசிங்கம் பேசுகையில், சர்வதேசியத்தை இடதுசாரிகளின் முன்னணியொன்றை அமைத்ததன்மூலம் உலகிலேயே முதன் முறையாக இலங்கையில் நிலைநாட்டக் கூடியதாகவிருக்கிறது என்று கூறினர்

அவர் மேலும் கூறியதாவது:

"இலங்கையின் அரசியலில் ஒவ்வொரு முக்கிய திருப்பம் ஏற்படும்பொழுது சிறுபான்மையினர் அதிலும் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் தவருன முடிவு செய்வதில் பெயர் பெற்றவர்களாகவிருந்தார்கள். இவர்கள் விட்ட பிழைகளினல் ஏற்பட்ட நிலையில் தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்தை கட்டாயபடுத்தி ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிருர்கள். இடதுசாரிகளின் ஐக்கிய முன்னணி நாட்டின் பிரச்னைகளில் தீர்வு காண்பதற்கு திறமையான உத்தரவாதமளிக்கிறது.

இம் முன்னணியை உபயோகித்து சிங்கள பொதுமக்களுடன் சேர்ந்து நாட்டின் பிரச்னைகளுடன் ஒன்ருக தங்களது பிரச்னைகளையும் தீர்த்துக்கொள்ள தமிழ் பேசும் மக்கள் தவறக் கூடாது.

திருவாளர்கள் பொ. நாகலிங்கம், எம். சி. சுப்பிரமணியம் உட்பட பலர் பேசினர்கள்.

## உலகில் மேதினம்

புதுடில்லி, மே. 1

உலகின் பல தலைநகரங்களிலும் இன்று மேதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாஸ்கோவில் நடைபெற்ற மாபெரும் ராணுவ அணிவகுப்பை, கியூபா பிரதமர் திரு. காஸ்ட்ரோ பார்வையிட்டார்.

பிரான்ஸில் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன. பிரிட்டனிலும், இத்தாலியிலும் பல அணிவகுப்புக்களும், ஊர்வலங்களும் நடைபெற்றன.

## சிறுவன் மரணம்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன் துறை-யாழ்ப்பாணம் வீதியில் நேற்று மாலை ஏற்பட்ட லொறி விபத்துக் காரணமாக 12 வயதுள்ள அந்தோனிமுத்து மனேகரசீலன் என்ற சிறுவன் இன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானர்.

லொறிச் சாரதி செல்லத்துரை மகாலிங்கத்தை 1000 ரூபா பிணையில் செல்லுமாறு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வெல்லி டி' தாமோதரம் உததரவிட்டார்.

## நேரு அறிக்கை

புதுடில்லி, மே 2

வெளிவிவகாரம்பற்றி இந்தியப்பிரதமர் நேரு திங்கட்கிழமை லோகசபையில் அறிக்கையொன்றை வெளியிடுவார் என்று இந்திய ரயில்வே மந்திரி சர்தார் ஸ்வர்ண்சிங் தெரிவித்தார்.

இந்திய-பாகிஸ்தான் பேச்சுவார்த்தை சம்பந்தமாகவும் வெளிநாட்டுப் பிரமுகர்களின் இந்திய விஜயம்பற்றியும் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரதமர் அறிக்கைவிட விருக்கிருர்.

## நெல் குத்தும் ஆலையில் நெரியுண்டு மரணம்

கண்டி, வியாழன்

நெல் குத்தும் ஆலைக்கு நெல் எடுத்துச்சென்ற வயோதிகப் பெண் ஒருவரின் சேலைத் தலைப்பு எதிர்பாராதவிதமாக இயங்கிக்கொண்டிருந்த இயந்திரத்தில் சிக்கியதால் அவர் இழுக்கப்பட்டு நெரியுண்டார். அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரிக்கு உடன் எடுத்துச் செல்லப்பட்டபோது அவர் அங்கு மரணமானர்.

விபத்தினல் ஏற்பட்ட மரணம் என மரணவிசாரணை அதிகாரியால் தீர்ப்பளிக்கப்பட்டது:

## "யோசனை கொண்டுவரவில்லை" டில்லியில் சாண்டிஸ்

புதுடில்லி, மே 2

நேற்று கராச்சியிலிருந்து புதுடில்லி வந்துசேர்ந்த பிரிட்டிஷ் காமன்வெல்த் உறவு மந்திரி திரு. டங்கன் சாண்டிஸ் நிருபர்களின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்காக தாம் கராச்சிக்கோ புதுடில்லிக்கோ யோசனை எதுவும் கொண்டுவரவில்லையென்ருர். "காஷ்மீர் பிரச்னைக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் தீர்வு காணவேண்டுமென்ற கருத்துடையவர்கள் நாங்கள்" என்று டங்கன் சாண்டிஸ் கூறினர்.

புதுடில்லியில் இவர் நான்கு நாட்கள் தங்கியிருப்பார்.

# இடது சாரிகள் பதவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்ல பேசுகையில் கூறியதாவது:

எதிர்க் கட்சிகளைப் போல் அரசாங்கக் கட்சி ஆட்சிபீடத்தில் தான் அமர்வதற்கு தொழிற்சங்கங்களைப் பயன்படுத்தவில்லை.

இடதுசாரிக்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதில் என்றுமே வேற்றி பெற மாட்டார்கள்.

இலாகா அற்ற மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா கூறியதாவது:

அரசாங்கத்தின் சகல கொள்கைகளையும் ஏற்ற எதிர்க்கட்சியினர் இப்பொழுது அரசாங்கக்கொள்கைகளை எதிர்க்கிருர்கள்.

கிராம மக்களின் ஆதரவை மட்டும் பெற்றுவந்த அரசாங்கம் இப்பொழுது நகர மக்களின் ஆதரவையும் பெற்று வருகிறது.

உணவு, வர்த்தக, கப்பல், போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன பேசியதாவது:

இப்பொழுது நாட்டுக்குத் தேவையானது 'முன்னணி'களல்ல.

### '6 மாதத்திற்குமேல் முன்னணி நீடிக்காது'

மக்களுக்கு இவ்வித முன்னணிகளில் இப்போது அலுப்புத்தட்டிவிட்டது. இடது சாரிக் கட்சிகளின் ஐக்கிய முன்னணிக்கு அவர்கள் ஒரு பொழுதும் வாக்களிக்க மாட்டார்கள். மூன்று இடது சாரிக் கட்சிகளின் ஐக்கிய முன்னணி 6 மாதத்துக்கு மேல் நீடிக்காது.

### இடதுசாரிக் கட்சியில் பெரிய முதலாளிகள்

ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மஹாநாமசமரவீரா பேசுகையில் கூறியதாவது:—

பெரிய முதலாளிகளெல்லாம் மூன்று இடது சாரிக் கட்சிகளில்தான் இருக்கிருர்கள் டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் விக்கிரமசிங்கா, டாக்டர் கொல்வின் ஆர் டி' சில்வா போன்ற பெரிய முதலாளிகள் யு. என். பி. யில் கூட இல்லை.

சமசமாஜக் கட்சி, கம்யூனிஸட் கட்சி ஆகிய கட்சியைச் சார்ந்தவர்கள் அரசாங்க இலாகாக்களில் இருக்கிருர்கள். இவர்கள் அரசாங்கத்தின் வேலைகளுக்கு நாசம் விளைவித்துக்கொண்டிருக்கிருர்கள்.

தொழில் மந்திரி திரு. எம். பி. டி. சற் சிறிவர்தனவும் வேறு பலரும் கூட்டத்தில் பேசினர்.

## 200 பேருக்கு வேலை வாய்ப்பு?

பொரளை, வியாழன்

சுகாதார இலாகா தயாரித்துவரும் திட்டம் ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டால் தாதியார்களுக்கும் மருத்துவ தாதிமார்களுக்கும் இடைப்பட்ட தராதரத்துடன் 200 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கலாம் எனச் சொல்லப்படுறது.


இப்பொழுது திரையிடப்படுறது

சினிமாஸ் லிமிட்டெட்ஸ்தபனத்தாரின்

மகத்தான வெளியீடு

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம்!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்)

(ஜெமினி) (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்

★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை

சிவாஜி கணேசன்

எஸ். எஸ். ராஜேந்திரன்

பி. சரோஜா தேவி

ஆர். விஜயகுமாரி

எம். ஆர். ராதா

வி. நாகையா

எம். வி. ராஜம்மா

பி. எஸ். வீரப்பா

புஷ்பலதா



நடித்த

— பி. எஸ். வி. பிக்சர்ஸ் —

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

மனோகரா (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், பி. பானுமதி நடித்த

மக்களைப் பெற்ற மகராசி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.